பக்கங்கள்: 11
விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 16 திங்கட்கிழமை 30.05.2022 கதிர் 206

### இது ரகசியம் அல்ல!

ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய நண்பராக இருந்த சுமந்திரனும், அவரது சீடர் சாணக்கியனும் ஏன் இப்படிப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் போட்டுப் பிறாண்டிப் பிடுங்குகிறார்கள் என்று எனது நண்பர் ஒருவர் கேட்க, அதற்கு 2

# ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது கட்சித் தலைவர்களின் விடயமாம்!

## பொறுப்பைக் கைகழுவினார் ரணில் நாட்டு மக்களுக்கு அவரே தெரிவிப்பு



கொழும்பு,மே 30

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் மீள நடைமுறைப் படுத்தப்படும். அதற்கான ஏற்பாடாகவே அரசமைப்பிற்கான 21 ஆவது திருத்தச்சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பில் கட்சி தலைவர்கள்தான் தீர்மானத்துக்கு வர வேண்டும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 10

## ஹம்பாந்தோட்டை சென்றார் நாமல்!



மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் ஹம்பாந்தோட்டை, சூரியவெவ, தங்காலை ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட வீடுகள், வர்த்தக 10

## வரும் சித்திரையில் புத்தாண்டுக்கு முன் பொதுத் தேர்தல்?

இலங்கையில் 2023 ஆம் ஆண்டு பிறந்ததும் பொதுத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

பெரும்பாலும்பொதுத் தேர்தல் 2023 10

## மருத்துவ மாணவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணி கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசிக் கலைப்பு!





தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் சமூக ஸ்திரமின்மைக்கு தீர்வு காணுமாறு கோரி நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்ட மருத்துவ பீட மாணவர்களை பொலிஸாரால் கண்ணீர்ப் புகைக் குண்டுவீச்சு மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் 10

## வவுனியா இராமனூர் பகுதியில் நேற்று யானைக் கூட்டம் திடீர் படையெடுப்பு!



வவுனியா – இராமனூர் பகுதியில் யானைக் கூட்டங்கள் படையெடுத்து வந்தமையால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். 10

## மஹிந்த, நாமலை ஆஜராகுமாறு மனித உரிமைகள் குழு அழைப்பு



முன்னாள் பிரதமர் மனித உரிமைகள் ஆணைக்குழு ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ போன்றோரை அழைத்து வாக்குமூலம் பெறுவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. 2

## தமிழக நிவாரணப் பொருள்கள் இன்று ரயிலில் யாழ் வருகின்றன

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.30

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான தமிழக நிவாரணப் பொருள்கள் இன்று ரயிலில் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படுவதாக மாவட்டச் செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மாவட்டச் செயலாளர் மேலும் விவரம் தெரிவிக்கையில் –

இந்தியாவின் தமிழ்நாடு முதலமைச்சரால் அனபளிப்புச் செய்யப்பட்ட பொருள்கள் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட ரயில் மூலம் 2

## நடேசனின் நினைவேந்தல் நேற்று மாலை யாழ் நகரில்



(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,மே. 30

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் ஜயாத்துரை நடேசனின் 18 ஆவது 2

## 21இன் இறுதி வடிவத்தை பார்த்தே கூட்டமைப்பு முடிவு

19 ஆவது திருத்தத்துடன் ஒப்பிடுகையில் 21 ஆவது திருத்தச்சட்டமூலம் மிகவும் பின்னடைவானது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஆகவே 21 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் இறுதி வடிவம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே அதற்கு ஆதரவளிப்பதா, இல்லையா என்பது குறித்துத் 2

## பழுதடையும் பொருள்களுடன் 900 கொள்கலன்கள் தேக்கம்

இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசிய உணவுப்பொருள்கள் அடங்கிய சுமார் 500 கொள்கலன்களை விடுவிக்க முடியாதுள்ளதாக அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

திறந்த கணக்குகள் மூலம் இறக்குமதி செய்வதைத் தடை செய்யும் அரசாங்கத்தின் 2

## அரசியல் கட்சிச் செயலர்களுடன் தேர்தல் ஆணைக்குழு சந்திப்பு

இலங்கைத் தேர்தல் ஆணைக்குழு சகல அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது. எதிர்வரும் ஜுன் ஆறாம் திகதி இந்தக் கலந்துரையாடல் தேர்தல் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. 2

## 21 க்கு சு.க. ஆதரவு!

தானும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அரசமைப்பின் உத்தேச 21 ஆவது திருத்தத்தை முழுமையாக ஆதரிப்பதாக அக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

நீதி அமைச்சர் விஜேதாஸ 2

## இனி இது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான் கூறிய பதிலை அவர் 'கனகச்சிதமான விளக்கம்' என்று பாராட்டினார் என நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

எடுத்த எடுப்பில் நான் மொட்டையாக அவருக்குப் பதில் சொன்னேன்.

"சஜித் தலைமையில் தேசிய அரசு அல்லது சர்வகட்சி அரசு அமைவதற்கான சாத்தியங்கள் கருக்கட்டி, முளைவிட்டு, அதற்கான வாய்ப்புகள் தோன்றிய சமயத்தில், இடையில் புகுந்து விளையாடி, சின்னத்தனமாக நடந்து, அந்த முயற்சிகளுக்கு நிரந்தர சாவு மணி அடித்து, அதை துவம்சம் செய்து விட்டார் ரணில். அந்த உத்தேச தேசிய அரசில் வடக்கிலிருந்து சுமந்திரனுக்கும், கிழக்கிலிருந்து சாணக்கியனுக்கும் முக்கிய அமைச்சுப் பதவிகள் கிடைப்பதற்கு வாய்ப்பு இருந்திருக்குமோ என்னவோ...! அதற்கு ஆப்பு அடித்துவிட்ட ரணில் மீது, அதனால்தான் அவர்கள் கோபப்படுகிறார்கள் போலும்...!" – என்று வெறும் பேச்சுக்கு நான் ஒரு கதை அவிழ்த்து விட்டேன். அரசியலில் தேர்ந்த என் நண்பருக்கும் என் பேச்சின் தாற்பரியம் நன்கு விளங்கி விட்டது.

"கனகச்சிதமான கணக்கு. அப்படித்தான் இருக்கும். அப்படி இல்லாமல் இப்படி ஒரே அடியாக எழுந்து நின்று அவர்கள் ரணிலுக்குப் போட்டுப் பிடிக்க மாட்டார்கள்" – என்று எனது கருத்துக்கு சேர்ந்து நியாயம் கற்பித்தார் அவர்.

நான் அவருக்குப் பின்னர் விளக்கினேன்.

தங்களுக்கு அமைச்சுப்பதவி கிடைக்கவிருந்த வாய்ப்பை ரணில் குழப்பி விட்டார் என்ற கோபத்தில்தான் இப்படி ரணிலை சுமந்திரனும் சாணக்கியனும் வைகின்றார்களா என்பதை அவரவர்கள் மனதிடம் தான் கேட்டு உறுதி செய்ய வேண்டும்.

ஆனால், தேசிய அரசு அல்லது சர்வகட்சி அரசு அமைவது இன்றைய கால கட்டத்தில் பயனுள்ளதாக இருக்கும் என்ற சுமந்திரனின் கருத்து எனக்கும் ஏற்புடையதே. அந்த வாய்ப்பைக் குழப்பியமையின் பேரில் ரணில் மீது சுமந்திரன் சீற்றப்படுவதற்கு நியாயமான வேறு பிற காரணங்கள் உண்டு.

இந்த நெருக்கடி சமயத்தில் சஜித்தின் கட்சியுடன் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தியவர் சுமந்திரன்.

சஜித்தின் கட்சியின் சார்பில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அடியோடு ஒழிப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு, அது இப்போது உயர் நீதிமன்றத்தின் பரிசீலனை வரை சென்றிருக்கின்றது. அந்த 21 ஆவது திருத்தச் சட்ட வரைவை தயாரித்தவர் – அதன் பிதாமகர் – சுமந்திரன் என்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

அந்த வரைவு தயாரிக்கப்படும் போதே இனப்பிரச்சனைத் தீர்வுக்கான விடயங்களையும் அதில் சேர்த்துக் கொண்டால் என்ன என்ற கருத்து நிலைப்பாட்டை திரும்பத் திரும்ப வலியுறுத்தியவர் சஜித் என பல வட்டாரங்களில் என்னால் உறுதிப்படுத்த முடிந்தது. Once and for all பிரச்சினைகளைத் தீர்த்து விடுவதுதான் நல்லது என்பது அவரின் நிலைப்பாடு.

ஆனாலும், இந்தச் சமயத்தில் அதனைச் சேர்ப்பது பல புதிய குழப்பங்களையும் கொண்டுவந்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் முயற்சிக்கும் ஆப்படித்துவிடும் எனப் பலரும் சுட்டிக் காட்டியமையை அடுத்து அந்த எண்ணத்தை – அந்த வரைவில் இந்த விடயங்களைச் சேர்ப்பதை – கைவிட சுமந்திரனும் சஜித்தும் முடிவுசெய்தனர் என்பதையும் நான் பல நாள்களுக்கு முன்னரே அறிந்திருந்தேன்.

ஆனாலும், சஜித்தின் இணக்கத்துடன் அந்த வரைவில் – இப்போது உயர்நீதிமன்றப் பரிசீலனையில் இருக்கும் அந்த சட்டவடிவத்தில் – கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து, இன்றும், நாளையும் உயர் நீதிமன்றம் விசாரிக்கும் அந்த தனி நபர் சட்டமூல வடிவத்தில் – சுமந்திரன் ஒரு முக்கிய பொறி – அல்லது பொறி – வைத்து இருக்கின்றார்.

அந்த சட்ட வரைவின்படி, ஆளுநர் வாயிலாக மாகாண சபை மீது ஜனாதிபதி கொண்டிருக்கும் முழுமையான மேலாதிக்கம் உடைத்தெறியப்படுகின்றது. அந்தச் சட்ட வரைவு தப்பித்தவறி அரசமைப்புத் திருத்தமாக நிறைவேற்றப்படுமானால், மாகாணசபைகள் ஓரளவு சுதந்திரமாக – இந்திய மாநிலங்களுக்கு ஒப்பான வகையில் – ஆளுநரின் அதீத தலையீடுகள் இன்றி – முதலமைச்சரின் தற்றுணிவு அதிகாரத்துடன் – பல விடயங்களை கையாளும் சட்ட நிலைமை உறுதிப்படுத்தப்படும்.

இதற்கிடையில், தமக்கென ஜனாதிபதியால் பிரேக்கப்பட்ட பிரதமர் பதவியை ஏற்காமல், இழுத்தடித்து, நிபந்தனை விதித்தார் சஜித். எதற்காக?

இத்தகைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்தல் உட்பட பல திட்டங்களுக்கு ஒரு கால ஒழுங்கின் படி, Road Map உடன், ஓர் இணக்கத்தை – உடன்பாட்டை – ஜனாதிபதியுடன் ஏற்படுத்தி, அதன் அடிப்படையில் பிரதமர் பதவியை கையில் எடுக்கவே சஜித் பிரேமதாஸ காய் நகர்த்தினார்.

ஆனால் தனது ஐ.தே.கட்சியை உடைத்துப் பிளந்து, தன்னையும் தனது கட்சியையும் வரலாற்றுத் தோல்வியடைய வைத்துச் செல்லாக்காசாக்கிய சஜித் மீது இயல்பாகவே காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்த ரணில், சந்தர்ப்பம் பார்த்து சஜித்தை வீழ்த்துவதற்காகத் தனது குயுக்தித்தனத்தை – குசும்புத்தனத்தை – இப்படிக் குறுக்கால் போய்க் காட்டிவிட்டார்.

அவர் குறுக்கால் போனது சஜித்துக்கு கிடைக்கவிருந்த பிரதமர் பதவிக்கு மட்டுமல்ல, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் கொடூரப் பிடியிலிருந்து இலங்கை மக்கள் விடுபடுவதற்குக் கிடைத்த அற்புதமான வாய்ப்புக்கும் இடையில்தான்.

இவற்றை முழுமையாக அறிந்திருக்கும் சுமந்திரன், ரணில் சுயநல அரசியலுக்காக நாட்டின் தேசிய நலனைச் சின்னாபின்னமாக்கிய சின்னத்தனமான தலைவர் என்று கருதி, இப்படித் திட்டித் தீர்த்து வைவதில் ஒரு நியாயம் இருப்பதாகவே எனக்குப் படுகின்றது.

இதனை என் நண்பருக்கு சாவகாசமாக நான் விளக்கினேன். அவரும் ஒப்புக் கொண்டார்.

இது விடயத்தில் ஒரு கொசுறு தகவலும் உண்டு. அந்த நண்பர் நமது அரசியலில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர். தமிழ்த் தேசியத்துடன் அன்றும், இன்றும், என்றும் நிற்பவர். வெளிப்படையாக துணிச்சலுடன் பேசுபவர். அதனால் அடிக்கடி கொழும்புக் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கும், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கும் விசாரணைக்கு அழைக்கப்படுபவர்.

அவரது பிரதேசத்தில் அவரை இழந்தமையால் கூட்டமைப்பு – தமிழரசு – பல உள்ளூராட்சி சபைகளைக் கோட்டை விட்டு விட்டது என்பது என் மதிப்பீடு.

சேற்றுத் தண்ணி தேங்கிய மாதிரி, சில கட்சிகளின் தலைமையில் சில வயோதிபர்கள் தேங்கி விட்டமையால் இத்தகைய துடிப்புள்ள, உண்மையான தேசியப் பற்றுள்ள ஆர்வலர்களைத் தமிழ்த் தேசியத் தரப்புகள் இழந்து நிற்கின்றன என்ற உண்மையையும் இந்த சந்தர்ப்பத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

**- மின்னல் -**

## மஹிந்த, நாமலை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலிமுகத் திடல் அமைதிப் போராட்டத்தின் மீதான தாக்குதல்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக வாக்கு மூலம் பெற்றுக்கொள்ளவே முன்னாள் பிரதமர் அழைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பிரதமருக்கு மேலதிகமாக நாமல் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரண ஆகியோரையும் எதிர்வரும் புதன்கிழமை முன்னிலையாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாக அவன்ட் கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற கலவரத்தில் சிறைச்சாலைக் கைதிகள் குழுவொன்று ஈடுபட்டதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்கே அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

சிறைக்கைதிகள் சம்பவம் தொடர்பான விசாரணைக்காக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் முன்னதாக ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை எதிர்வரும் வியாழக்கிழமை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு மேல் மாகாண பொலிஸ்மா அதிபர் மற்றும் தேசபந்து தென்னகோன் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## தமிழக நிவாரணப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை யாழ்ப்பாணத்தை வந்தடைகின்றன.

யாழ்ப்பாணத்திற்கு அனுமதிக்கப்பட்ட பொருள்களில் 40 வீதமானவற்றை இந்த ரயிலில் ஏற்றக்கூடிய வசதிகள் காணப்பட்டமையினால் யாழிற்கு அனுமதிக்கப்பட்ட 20 ஆயிரம் அரிசி மூடைகளில் 8 ஆயிரத்து 755 மூடைகளும், 500 பைக்கற் பால் மாவும் எடுத்து வரப்படுகின்றன. எஞ்சியவை இரண்டு தினங்களில் எடுத்து வரப்படும்.

இப்போது எடுத்து வரப்படும் பொருள்களில் மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவுக்குரியவை பளை ரயில் நிலையத்திலும், சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரியவை சாவகச்சேரி ரயில் நிலையத்திலும் இறக்கப்படும். அதேநேரம் எஞ்சியவை யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் வைத்து யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதுவரினால் கையளிக்கப்படும்.

இந்தப் பொருள்களில் வேலணை பிரதேச செயலகப் பிரிவில் 3,000 குடும்பங்களுக்கும், ஊர்காவற்றுறை பிரதேச செயலகப்பிரிவில் 2,750 குடும்பங்களுக்கும், காரைநகர் பிரதேச செயலகப் பிரிவில் 2,500 குடும்பங்களுக்கும் நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவில் 1,200 குடும்பங்களுக்கும், மருதங்கேணி செயலகப் பிரிவில் 3,750 குடும்பங்களுக்கும் அனுமதிக்கப்பட்ட அளவு முழுமையாக வழங்கப்படவுள்ளது.

மற்றைய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இன்று பகுதியளவிலும் வழங்கப்பட்டு இரண்டாம் கட்டத்தில் எஞ்சிய அளவும் வழங்கப்படும். – என்றார்.

## நடேசனின் நினைவேந்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவேந்தலும் நூல் வெளியீடும் யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் மாலை 4 மணியளவில் யாழ். ஊடக அமையத்தின் தலைவர் ஆ.சபேஸ்வரன், தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஊடகவியலாளர் ஜயாத்துரை நடேசனின் உருவப்படத்திற்கு வடமாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானமும், யாழ் மாநகர முதல்வர் மணிவண்ணனும் மலர்மாலை அணிவித்தனர்.

ஈகைச்சுடரை ஊடகவியலாளர் ஜயாத்துரை நடேசனின் உறவினரும் சட்டத்தரணியுமான க.சுகாஷ் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் நடேசன் தொடர்பில் அவருடன் ஊடகப்பணியாற்றிய சக ஊடகவியலாளர்கள், செயற்பாட்டாளர்கள் எனப் பலரது நினைவுகூரலுடன் வெளிவந்துள்ள நூல் அறிமுகமும் வெளியீடும் நடைபெற்றன. நூலை யாழ் ஊடக அமையத்தின் செயலாளர் நிதர்ஷன், ஊடகவியலாளர் ஜயாத்துரை நடேசனின் குடும்பத்தினருக்கு சமர்ப்பணம் செய்தார்.

அதேவேளை நடேசனின் ஊடகத்துறை பயணம் தொடர்பிலான நினைவுரைகளுடன் ஞாபகார்த்த நினைவுப் பேருரையினை யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கோசலை மதன் ஆற்றினார்.

நிகழ்வின் இறுதியாக ஊடகவியலாளர்களது தயாரிப்பில் உருவாக்கப்பட்ட ஆவணப்பட காட்சிப்படுத்தலும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தின் கரவெட்டியில் பிறந்த மூத்த ஊடகவியலாளர் ஜயாத்துரை நடேசன் 2005 ஆம் ஆண்டின் மே 31 ஆம் திகதி மட்டக்களப்பில் வைத்து சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

## 21இன் இறுதி வடிவம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஏற்கனவே கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்தம் முன்னேற்றத்தை காண்பிக்கும் நிலையில், இந்த 21 ஆவது திருத்தம் அதனை விடப் பின்னடைவான திருத்தமாகவே காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக ஜனாதிபதியினால் தாம் விரும்பிய அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியாது என 19 ஆவது திருத்தம் கூறுகின்ற போதிலும், உத்தேச 21 இன் வரைவில் அவர் தமது விருப்பப்படி அமைச்சுப் பதவிகளை வகிக்க இடமளிக்கப்பட்டிருக்கின்றது என எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அத்தோடு முதலில் 19 ஆவது திருத்தத்தை மீண்டும் நடைமுறைப் படுத்தி விட்டு, பின்னர் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்குவது குறித்துக் கவனம் செலுத்தலாம் என கூறப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் குறிப்பிட்டார்.

இரண்டு விடயத்தையும் தனித்தனியாகச் செய்யவேண்டும் என்று கூறுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை என்பதனால் தாமதமின்றி நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை இல்லாது ஒழிக்க வேண்டும் என்றும் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

## பழுதடையும் பொருள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திடீர் நடவடிக்கை காரணமாகவே இந்த இக்கட்டு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதியாளர் சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவிரட்ன கூறுகையில் –

திறந்த கணக்குகள் மூலம் இறக்குமதி செய்வதைத் தடை செய்யும் அரசாங்கத்தின் நடவடிக்கை காரணமாக இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 500 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கி இருக்கிறது.

மேலும் வெங்காயம், உருளைக் கிழங்கு, பூண்டு, பருப்பு, உலர் உணவுப் பொருள்கள் போன்ற இலகுவில் பழுதடையும் அத்தியாவசிய பொருள்கள் இவற்றில் உள்ளன. இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய 500 கொள்கலன்களையும் விடுவிக்குமாறு அதிகாரிகளிடம் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த கொள்கலன்களுக்கு மேலதிகமாக, டொலர் பிரச்சினை காரணமாக சுமார் 300 முதல் 400 உணவுப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கி கிடக்கின்றன எனவும், அந்த கொள்கலன்களில் இலகுவில் பழுதடையும் உணவுப் பொருள்கள் இருக்கின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரசியல் கட்சிச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் தற்போதைய நிலை மற்றும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றைத் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தமக்கிடையே மேற்கொண்டுள்ளனர். அதன் தொடர்ச்சியாக அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் அவர்கள் கலந்துரையாடத் தீர்மானித்துள்ளனர்.

## 21 க்கு சு.க. .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை தாம் அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரைவில் உள்ள அனைத்துத் திருத்தங்களுக்கும் தாங்கள் உடன்படுகின்றனர் எனவும் மேலும் பல முன்மொழிவுகளும் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன எனவும் அவர் அக்கடிதத்தில் கூறியுள்ளார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் இரட்டைக் குடியுரிமையை உடையவர்கள் உயர் பதவிகளை வகிக்க தடைவிதிக்க வேண்டும்

## வாசுதேவ நாணயக்கார கோரிக்கை



இரட்டை குடியுரிமை உடைய நபர் அரசியலில் அல்லது அரச உயர்பதவி வகிப்பதற்கும் தடை விதிக்கப்பட வேண்டும் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இரட்டை குடியுரிமையுடைய இருவர் இதுவரையில் அரசியல் மற்றும் அரச உயர் பதவியில் செல்வாக்கு செலுத்தியுள்ளார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு 21 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற ஆளும்கட்சியின் உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வாசுதேவ நாணயக்கார கேட்டுக் கொண்டார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படும் போது முறையான ஒழுங்கு முறைமை பின்பற்றப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இல்லை என்றால் நல்லாட்சி அரசாங்கத்தில் அரச தலைவர்களுக்கிடையில் நிலவிய அதிகார போட்டித்தன்மை மீண்டும் நிலவும் என வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டினார்.

முழு நாடும் அரசமைப்பு திருத்தத்தைக் கோரும்நிலையில்பொதுஜனபெரமுனவினர் மக்களின் நிலைப்பாட்டுக்கு முரணாக செயற்பட முயற்சிக்கின்றேன் என அவர் குற்றஞ்சாட்டினார்.

அரசமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே சமூக கட்டமைப்பில் நிலவும் அமைதியற்ற தன்மைக்குத் தீர்வு காண முடியும் என்றும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆளும் தரப்பின் பொறுப்பு

**உத்தேச 21 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக ஆளும் கட்சியினருக்கு இடையில் கருத்து வேறுபாடு முற்றியிருக்கின்றது எனவும், அது தொடர்பில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று மாலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசுகின்றனர் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.**

**இந்த 21 ஆவது திருத்த நிலைப்பாடு தொடர்பாக ஆளும் தரப்பிலிருந்து முரண்பாடான தகவல்கள் வெளிவருகின்றன.**

**இந்த விடயத்தில் ஆளும் தரப்பில் இரு ராஜபக்ஷக்கள் இருவேறு சந்தர்ப்பங்களில் எடுத்த நிலைப்பாடுகளும் – நாட்டுக்கும், மக்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் அவர்கள் அளித்த உறுதி மொழிகளும் – கவனிக்கத்தக்கவை.**

**அந்த வாக்குறுதிகளை அறிவித்தவர்களின் ஒருவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அதையொட்டிய நிலைப்பாடு எடுத்து அதனை வெளியிட்டவர் மற்றொரு தலைவரான மஹிந்த ராஜபக்ஷ. இருவரின் கடந்த கால நிலைப்பாடுகளும் இந்தச் சமயத்தில் நோக்கப்பட வேண்டியவை.**

**கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலத்தில் இரண்டு வாக்குறுதிகள் தந்தார்.**

**ஒன்று – தாம் பதவியேற்று இரண்டு வருடங்களுக்குள் புதிய அரசமைப்பை ஏற்படுத்தித் தருவார் என்பது.**

**அடுத்தது – அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நீக்கி, 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்ட போது அவர் அளித்த வாக்குறுதி. இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள் எம்.பியாவதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கும் விதத்தில் இந்த 20 ஆவது திருத்தம் அமைந்தமையை ஒட்டி பல எம்.பிக்கள் அதனை ஆட்சேபித்தனர். இப்போதைக்கு இந்த 20 ஆவது திருத்தத்தில் அதற்கு அனுமதி அளியுங்கள், பிறகு புதிய அரசமைப்புக் கொண்டு வரப்படும் போது இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றோர் எம்.பியாக முடியாது என்ற சரத்தை நிச்சயமாக அதில் சேர்த்துக் கொள்வேன் என்றார் கோட்டாபய ராஜபக்ஷ.**

**இப்போது அவர் வாக்குறுதி அளித்தபடி தமது பதவி காலத்தில் முதல் இரண்டு வருடங்கள் தாண்டிய பின்னரும் புதிய அரசமைப்பை அவரால் ஏற்படுத்த முடியவில்லை. அது இனி, குறுகிய காலத்தில் – இப்போதைக்கு – சாத்தியப்படுவதற்கான வாய்ப்புகளும் தென்படவில்லை. எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் 19ஆவது திருத்த ஏற்பாடுகளைத் திரும்பவும் கொண்டு வருவதற்காகச் சமர்ப்பிக்கப்படும் 21 ஆவது திருத்தத்தில் அதை உறுதிப்படுத்துவது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முதல் கடமையும் பொறுப்புமாகின்றது.**

**அடுத்தது – மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய உறுதிமொழி. இப்போது அரசு அமைத்திருக்கும் பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் அவர்தான். அக்கட்சியின் பிதாமகரும் அவரே.**

**இப்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடி உச்சகட்டத்தை எட்டிய போது – இம்மாத ஆரம்பத்தில் – பிரதமராக இருந்த அவர் 19ஆம் திருத்த ஏற்பாடுகளை அப்படியே மீளச் செயல்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தும் அமைச்சரவைப் பத்திரத்தை பிரதமராகத் தானே சமர்ப்பித்தார்.**

**பிரதமராக அவர் சமர்ப்பித்த அந்த அமைச்சரவை பத்திரத்தை அப்படியே ஏற்று செயல்படுத்த அங்கீகாரம் அளித்த அப்போதைய அமைச்சரவை அது தொடர்பில் மேல் நடவடிக்கை எடுக்க ஓர் உயர் மட்டக் குழுவையும் நியமித்தது.**

**கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பின்னர் வழங்கிய வாக்குறுதியைத்தான் –**

**இம்மாத முற்பகுதியில் பிரதமராக இருந்த பொதுஜன பெரமுன தலைவர் மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவை பத்திரம் மூலம் உறுதியளித்த விடயத்தைத்தான் –**

**19 ஆவது திருத்தத்தை அப்படியே மீளக் கொண்டு வருதல் என்ற கருத்தியல் முன்னெடுக்கின்றது.**

**கோட்டாபயவும் மஹிந்தரும் உறுதியளித்த அந்த நடவடிக்கையை எடுப்பதில் ஆளும் தரப்புக்குள் என்ன குழப்பம் இருக்க முடியும்? கட்சியின் உயர் தலைவர்களின் முடிவை – அவர்கள் நாட்டுக்கு அளித்த உறுதிமொழியை – நிறைவேற்றுவது அக்கட்சியின் பொறுப்பும் கடப்பாடும் கட்டாயமும் என்பதுதான் முக்கியமானதாகும்.**

# யாழில் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படவுள்ள முறை!

எரிவாயு சிலிண்டர் விநியோக பொறிமுறை தொடர்பான நடைமுறைகள் பற்றி யாழ்ப்பாண மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் அறிவித்துள்ளார்.

அது தொடர்பில் தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளவை வருமாறு –

தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண நிலைமையில் மக்களது கேள்விக்கு குறைவானசிலிண்டர்களேஎமக்குக்கிடைக்கப்பெறுவதால் கிடைக்கப்பெறும் சிலிண்டர்களை சீரான முறையில் மற்றும் நியாயமான விலையில் மக்கள் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக பின்வரும் பொறிமுறை ஊடாக எரிவாயு சிலிண்டர்களை எதிர்வரும் காலங்களில்பகிர்ந்தளிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

1. பொதுமக்களுக்கான வீட்டுப்பாவனை மக்களுக்கு விநியோகிக்கும் முறை:

கிராம அலுவலர் பிரிவுகளுக்கென ஒதுக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடம், உரிய கிராம மக்கள் தமது எரிவாயு சிலிண்டருக்கான பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

விநியோகஸ்தர்களும் மேற்படி விவரங்கள் தொடர்பான பதிவேடு ஒன்றை பேணுதல் வேண்டும்.

விநியோகஸ்தர்களிடம், ஒரு வீட்டுக்கு ஒருசிலிண்டர்என்றமுன்னுரிமைஅடிப்படையில் பதிவு மேற்கொள்ளப்படுவதை கிராம அலுவலர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

விநியோகஸ்தர்களுக்கு சிலிண்டர்கள் கிடைக்கப்பெற்றதும் பதிவு அடிப்படையில் அவர்களுக்கான விநியோகம் நடைபெறும்.

குறித்த நேரத்தில் பதிவு மேற்கொண்டோர் சமுகமளிக்காவிடின் பதிவு அடிப்படையில் அடுத்துள்ள பயனாளிக்கு விநியோகிக்கப்படும்.

விநியோகிக்கப்பட்ட விவரம் பிரதேச செயலக மேற்பார்வையில் குடும்ப பங்கீட்டு அட்டையில் திகதி குறிப்பிடப்பட்டு பதிவு செய்தல் கட்டாயமானது.

சிலிண்டரைப் பெறவருபவர் உரிய கிராம அலுவலர் பிரிவு பங்கீட்டு அட்டை, தேசிய அடையாள அட்டையுடன் பங்கீட்டு அட்டையில் பெயருடைய அங்கத்தவர் ஒருவராக இருத்தல் கட்டாயமானது.

விநியோகஸ்தர்களுக்கு விநியோகிக்கும் முறை:

தமக்கு கிடைக்கப்பெறும் சிலிண்டர்களது எண்ணிக்கை அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு லிற்றோ பிராந்திய முகாமையாளரால் வழங்கப்படும்.

கிடைக்கப்பெற்ற எரிவாயு சிலிண்டர்களது எண்ணிக்கைக்குஅமைவாகவிநியோகஸ்தர்களுக்கு விநியோகிக்க வேண்டிய சிலிண்டர்களது எண்ணிக்கை பிரதேச செயலாளர்களால் விநியோக நிறுவனத்துக்கு அறிவிக்கப்படும்.

அதன் அடிப்படையில் விநியோக நிறுவனத்தினர் முகவர்களுக்கு சிலிண்டர்களை விநியோகிப்பர்.

2. கைத்தொழில் நிலையங்கள், உணவுச்சாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் நலன்புரி சேவை நிறுவனங்கள் (சிறுவர் / முதியோர் இல்லம்) ஆகியவற்றுக்கு வழமை போல் விநியோகஸ்தர்களால் நேரடியாக விநியோகிக்கப்படும்.

# சவாரி விடந்தை அமைப்பதில் உள்ள இடர்பாடுகள் குறித்து ஸ்ரீதரன் ஆய்வு!





கிளிநொச்சி சோலைநகரில் நீண்ட காலமாக இருந்து வந்த சவாரி விடந்தையை அமைப்பதில் உள்ள இடர்பாடுகள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அந்தப் பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் மேற்படி விடந்தை அமைந்திருந்த பகுதிக்கு சென்று விடயங்கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

உருத்திரபுரம், சிவநகர், சோலைநகர், ஊற்றுப்புலம், புது முறிப்பு உட்பட பல கிராமங்களில் வசிப்பவர்களால் பல ஆண்டுகளாக இயங்கி வந்த விடந்தைக்குள் திடீரென வனவளத்திணைக்களம் எல்லையிட்டிருப்பதால் பாரம்பரியமாக நடைபெற்று வந்த சவாரிப் போட்டிகள் போன்றவை நடத்த முடியாமல் இருக்கின்றமை தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

மேற்படி விஜயத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினருடன் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஜெயக்குமார், புதுமுறிப்பு கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவரும் புது முறிப்பு தமிழரசுக் கட்சியின் அமைப்பாளருமான தங்கராசா உள்ளிட்ட கிராமங்களின் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



- ஹஸ்பர் ஏ ஹலீம் -

# திருகோணமலை சல்லி மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பது யார்?

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள முக்கிய ஆழ் கடல் மீனவக் கிராமங்களில் ஒன்றாக சல்லி மீனவக் கிராமம் சிறந்து விளங்குகின்றது.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக்குட்பட்ட இந்தக் கிராமம் கடல் தொழிலை வாழ்வாதாரமாக கொண்டு விளங்குகின்றது. இருந்த போதிலும் தற்போதைய பொருளாதார நெருக்கடி இவர்களின் அன்றாட ஜீவனோபாயத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. இயந்திரப் படகு மூலமாக ஆழ் கடல் மூலமாக மீனவத் தொழில் செய்து வரும் கடல் தொழிலாளர்கள் இயந்திரத்துக்குத் தேவையான மண்ணெண்ணெய் இன்றி தொழில் இழந்த நிலையில் கஷ்டப்படுகின்றனர் எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி இந்தக் கிராமத்தில் 900 மீனவக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற



நிலையில் மண்ணெண்ணெய் இன்றி கடலுக்குச் செல்ல முடியாமலும் அன்றாடம் உணவுக்குத் தட்டுப்பாடும் என்கின்ற நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

மண்ணெண்ணெய்க்காக பல மணி நேரம் வரிசையில் காத்திருந்த போதிலும் சில வேலை கிடைக்காமை வெறுங் கையுடன் வீடு திரும்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மண்ணெண்ணெய் தொடர்ச்சியாக வருவதில்லை. ஒரு கிழமைக்கு மூன்று அல்லது நான்கு தடவை அண்ணளவாகக் கிடைக்கப்பெற்றாலும் பல நூற்றுக்கணக்கான மக்கள் நிறைந்து காணப்படுகிறார்கள்.

ஒரு நாளைக்கு கடலுக்கு சென்று



வருவதாக இருந்தால் சுமார் 20 இற்கும் மேற்பட்ட லீற்றர் எண்ணெய் தேவைப்படுகிறது ஆழ்கடல் மீன் பிடிக்காகச் செல்வதாக இருந்தால் 40 கிலோ மீற்றர் தூரம் வரையாவது ஆகக் குறைந்தளவு செல்ல வேண்டியுள்ளது. இவ்வாறான நிலைமை இச் சல்லி மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கும் அந்நியச் செலவாணிக்கும் மீனவர்களின் பங்கு அளப்பெரியதாகக் காணப்படுகிறது. உலக நாட்டில் மீன் பிடித் தொழிலில் ஈடுபடும் நாடுகளின் பட்டியலில் ஆசியப் பிராந்தியத்தில் இலங்கையும் ஒன்றாக இடம் பிடித்துள்ளது. ஆனால் தற்போதைய பொருளாதார நெருக்கடி மீனவச் சமூகத்தின் வாழ்வாத ாரத்தைப் பாதித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கிராம மீனவர் (ரவிச்சந்திரன்) ஒருவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார். 'மண்ணெண்ணெய் இன்மையால் கடலுக்கு செல்ல முடியவில்லை ஒரு லீற்றர் 87 ரூபாவாக இருக்கின்ற போது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சுமார் 3,000, 4,000 லீற்றர் மண்ணெண்ணெயை பெற்று உள்ளூரில் சிலர் வியாபாரம் செய்வதற்காக ஒரு லீற்றர் மண்ணெண்ணெயை 225 ரூபாவுக்கு விற்பனை செய்கிறார்கள் இவ்வாறு வாங்குவதற்கு எங்களிடம் வல்லமை இல்லை. மீனவத் தொழில் செய்ய முடியாமல் தவிக்கின்றோம். கடலுக்குச் சென்று தொழில் செய்தால் தான் அரிசியை கூட வாங்கி மனைவி பிள்ளைகளைப் பார்க்கலாம். ஆகக் குறைந்தது 5 லீற்றர் கூட எண்ணெய் இன்றி கடலுக்கு செல்லமுடியவில்லை' எனத் தெரிவித்தார்.

எவ்வாறாக இருந்தாலும் ஆழ் கடல் மீனவத் தொழில் என்பது மண்ணெண்ணெய் இன்றி தொழில் செய்ய முடியாது. இயந்திரப் படகு மூலமான தொழிலை மாத்திரமே காலம் காலமாக செய்து வருகின்றார்கள். இந்தக் கிராமத்தை அண்டிய திருகோணமலை புல்மோட்டை பிரதான வீதியில் ஒரேயொரு எரிபொருள் நிரப்பு நிலையமே உள்ளது. சுமார் 10 கிலோ மீற்றருக்கும் அதிக தூரம் சென்று எரிபொருளைப் பெறவேண்டியுள்ளது.

நாட்டின் பெரும்பாலான கரையோரச் சூழலில் அதிக மீனவக் குடும்பங்கள், குடும்பத்தை மீன் பிடி மூலமாகவே பொருளாதாரத்தைக் கொண்டு செல்கிறார்கள். ஆனால் நாட்டின் பொருளாதார நெருக்கடி மீனவச் சமூகத்தையும் விட்டு வைக்கவில்லை. பாடசாலை செல்லும் மாணவர்கள், சிறிய குழந்தைகள் என இந்த மீனவர்களுக்கும் பிள்ளைகள் உள்ளனர். நாளாந்த செலவும் அதிகரித்துள்ள நிலையில் மீனவத் தொழிலின் பாதிப்பு அவர்களது குடும்பத்தையும் பெரிதும் பாதித்துள்ளது.

மீனவத் தொழில் பிரச்சினை தொடர்பில் அந்தப் பகுதியை சேர்ந்த மற்றுமொரு மீனவனான எஸ்.சுதாகரன் இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

'மீனவத் தொழிலுக்காக செல்வதற்கு ஒரு நாளைக்கு போதுமான எண்ணெய் கிடைக்கப் பெற்றாலும் ஒரு கிழமையில் ஒரு நாள் தான் தொழில். மற்றைய ஆறு நாள்களும் என்ன செய்வது? தொழிலின்றியே வீடுகளில் இருக்கிறோம். இதனை முடிவுக்கு கொண்டு வாருங்கள். கோட்டாபய அரசாங்கம் இருக்கும் தருணமே இந்த நிலை ஏற்பட்டுள்ளது தற்போதைய புதிய பிரதமராக பதவி ஏற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இந்த எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரவேண்டும்'

இவ்வாறான நிலை தொடர்ச்சியாக ஏற்பட்டால் மீன் பிடித் தொழில் பாதிக்கப்படுவது மட்டுமன்றி சமைப்பதற்கான கறி வகையிலும் பாரிய வீழ்ச்சி ஏற்படலாம். மக்களுடைய ஒரேயொரு போராட்டமும் அவர்களது கனவாகவுள்ளது யாதெனில் ஜனநாயக ரீதியான போராட்டம் பொருளாதார நெருக்கடி தீர்வு பெற வேண்டும் என்பதே கோட்டா ஹோ கோஷம் என்ற வாசகத்தை உள்ளடக்கிய போராட்டமும் ஆகும்.

மண்ணெண்ணெய் பிரச்சினைகளுக்கான தீர்வைத் தாருங்கள் என மீனவச் சமூகமும் பல போராட்டங்களை எரிபொருள் நிரப்பு நிலையம்,வீதிகள் என பல ஆர்ப்பாட்டங்களை நடத்திய போதும் உரிய தரப்பு அதனைக் கண்டு கொள்ளாமையே இவ்வாறான மீனவச் சமூகங்களுக்கும் இந்தப் பிரச்சினை மேலோங்கி வாழ்வாதாரம் பாதித்துள்ளது.

இவர்களுக்கான எண்ணெயை மீனவ கூட்டுறவு சங்கம் மூலமாகவோ அல்லது அரச கூட்டுத்தாபனம் ஊடாகவோ சலுகை விலையிலாவது வழங்க வேண்டும் என்பதே இந்தச் சமூகத்தின் கோரிக்கையாகும். ஆரம்பம் தொடக்கம் ஒரு லீற்றரின் விலை 40 ரூபாவாக இருந்து படிப்படியாக சடுதியான விலை அதிகரிப்பால் 87 ரூபா வரையாகவுள்ளது. பல லீற்றர் எண்ணெயை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் பெற்று கடலுக்கு சென்றாலும் மீன் படவில்லை என்றாலும் இன்னும் இன்னும் நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. இதனால் மன உளைச்சலுக்கு






கூட மீனவர்கள் ஆளாகுகின்றார்கள்.

இவர்களைப் பாதுகாப்பது யார்? அரசியல்வாதிகளால் எதையும் செய்ய முடியவில்லை பொருளாதார நெருக்கடியால் இவர்களது பங்கு ஒரு வீதம் கூட கடல் தொழிலுக்கான எண்ணெய் பெறுவதற்காக பிரயோசனம் இன்றி வாக்குகளுக்காக மாத்திரம் மீனவச் சமூகத்தை தேடும் அவர்கள் தற்போது எங்கே எனவும் ஒரு முறை சற்று அவர்கள் சிந்திக்கின்றனர்.

அரசாங்கம் மூலமாக வழங்கப்படும் மானியம் மூலமாக மண்ணெண்ணெயை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும் இல்லாது போனால் மீனவச் சமூகத்தின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிவிடும் என்பதில் எந்தவொரு ஐயமும் இல்லை.



# கலாநிதி ஆறு.திருமுருகனின் பிறந்தநாள் நிகழ்வில் இருவருக்கு இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது









தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவரும், பிரபல சைவத் தமிழ்ச் சொற்பொழிவாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் 61 ஆவது பிறந்தநாளை முன்னிட்டுக் கலாநிதி.ஆறு.திருமுருகனின் பிறந்தநாள் அறநிதியச் சபையின் ஏற்பாட்டில் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் விழா கடந்த சனிக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அன்ன பூரணி மண்டபத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

கலாநிதி ஆறு.திருமுருகனின் பிறந்தநாள் அறநிதியச் சபைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி விழாவில் மலையகத்தைச் சேர்ந்த பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சின்னையா கருப்பையா நவரட்ணராஜா மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியரும், யாழ்.கோப்பாயைச் சேர்ந்தவருமான இராமச்சந்திரன் இரமணன் ஆகியோர் இந்த வருட 'இளைய ஆற்றலாளர் விருது' வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

குறித்த இருவரும் தமது வாழ்க்கைத் துணையருடனும், பிள்ளைகளுடனும் இணைந்து கலந்து கொண்டு விருதினைப் பெற்றுக் கொண்டனர்.

மேற்படி விழாவில் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ க.செந்தில்ராஜக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் கலந்துகொண்டு ஆசியுரைகள் ஆற்றினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் வைத்தியநிபுணர் இ.சுரேந்திரகுமாரன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், துர்க்காதேவி ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த் தன், வலி. வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ. சுகிர்தன், அமெரிக்காவின் கணக் காய்வு நிறுவனமொன்றின் கணக்காளரும், சமூக ஆர்வலருமான கிருஷ்ண பிள்ளை பாலசுப்பிரமணியம், தெல்லிப்பழை உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சங்கீதா கோகுலதர்ஷன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரைகளை வழங்கியும் கௌரவித்தனர்.

இதேவேளை, மேற்படி விழா நிகழ்வில் பிறந்தநாள் விழா நாயகன் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் துறைசார் பெரியோர்களாலும், துர்க்காபுரம் மகளிர் இல்லச் சிறார்களாலும், ஆர்வலர்களாலும் பொன்னாடைகள், மலர்மாலைகள் அணிவித்தும், அன்பளிப்புக்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

இந்த இரு ஆற்றலாளர்களில் மலையகத்தைச் சேர்ந்த பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சின்னையா கருப்பையா நவரட்ணராஜா, மலையக சமூகத்தில் டிக்கோயா போர்டைஸ் கொணக்கொல்லை தோட்டத்தில் சாதாரண தேயிலை தோட்டத் தொழிலாளியின் பிள்ளையாகப் பிறந்து, மிகவும் கடுமையான பொருளாதார சவால்களுக்கு மத்தியில் தனது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புகள் மூலம் சிரத்தையான முயற்சிகளினூடாக இந்த உயரிய பெருமைக்குரிய இடத்தை அடைந்துள்ளார்.

யாழ்.இந்துக்கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் ஆசிரியர் இரமணன், இணைய வழி மூலமாகவும், காணொலிகள் மூலமாகவும் பாடப்பரப்புகளைக் கற்பிக்க இரவு பகலாக பெரும் முயற்சிகளில் இறங்கி, இலங்கையிலுள்ள சகல மாணவர்களும் இலகுவாக இணையும் பொருட்டு வைபர், வட்சப் போன்ற சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி அனைவருக்கும் இலகுவாக இணையவழிக்கல்வியில் இணைய வசதியேற்படுத்தினார். செயலட்டைகளை அச்சிட்டும் மாணவர்களின் வீடு வீடாக வழங்கினார். இதனால் பிரான்ஸைத் தலைமையகமாகக் கொண்ட பி.ஐ.சி. என்ற பல்தேசியக் கூட்டு நிறுவனத்தால் ஆண்டுதோறும் வழங்கப்படும் உலகின்தலைசிறந்த ஆசிரியருக்கான கிறிஸ்ரல் பேனா விருது 2021 இல் இரமணனுக்குக் கிடைத்தது. இந்த விருதின் ஊடாகக் கிடைக்கப்பட்ட 5 ஆயிரம் யூரோ பணமும் (ரூ. 11 லட்சத்து 50 ஆயிரம் ரூபா) 1,000 அமெரிக்கடொலர் பெறுமதியான பொருள்களும் தான்கற்பிக்கின்ற யாழ். இந்துக்கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கி தன் சேவையின் பெருமையை நிலைநிறுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கள்வருக்கு ஆதரவு தரும் கள்வர்களுக்கு மட்டு. மாவட்டத்தில் இடமளிக்கக் கூடாது!

## இரா.சாணக்கியன் எம்.பி.தெரிவிப்பு

(க.கிருபாகரன்)

இந்த நாட்டில் உள்ள கள்வர்களுக்கு ஆதரவளிக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கள்வர்களுக்கும் எதிர்காலத்தில் இந்த மாவட்டத்தில் இடமளிக்ககூடாது என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். மட்டக்களப்பு கறுப்பங்கேணி எவர் கிறீன் விளையாட்டுக்கழகம் நடத்தும் 2022 ஆம் ஆண்டுக்கான எவர் கிறீன் பிறீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி சனிக்கிழமை ஆரம்பமானது.

கறுப்பங்கேணி எவர் கிறீன் விளையாட்டு மைதானத்தில் இந்த சுற்றுப்போட்டி சிறப்பான முறையில் ஆரம்பமானது.

இந்தச் சுற்றுப்போட்டி நடைபெற்றுவரும் நிலையில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கலந்து



கொண்டு கிரிக்கெட் போட்டியை சிறப்பித்தார்.

இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இன்று நாட்டில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்ற இன்று மக்கள் தமது அன்றாட தேவை களை நிறைவேற்றிக்கொள்வதற்கு வரிசையில் நிற்கும் நிலையே உள்ளது. இன்று சில பொருள்களை காசு கொடுத்து வாங்கமுடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

ஓகஸ்ட் மாதமளவில் பாரியம் பஞ்சம் ஏற்படும் என்று புதிய பிரதமர் கூறியுள்ளார். அடுத்த மூன்று மாதங்களில் மக்கள் வாழ்நாளில் காணாத துன்பத்தை அனுபவிக்க போகின்றனர் என அமைச்சர்கள் சொல்கின்றார்கள்.

இதனை சொல்வதற்கு அமைச்சர்கள் இந்த நாட்டுக்குத் தேவையா?, இதனை சொல்வதற்கு ஒரு பிரதமர் தேவையா? தற்போதைய நிலைக்கு காரணம் தற்போதைய ஜனாதிபதி என்பது அனைவருக்கும் தெரியும். அதனால்தான் கோட்டா வேண்டாம் என்ற போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. எவ்வளவு கூறியும் வெட்கம், மானம், ரோசம் அற்றவர் அப்படியே பதவி விலகாமல் இருக்கின்றார். – என்றார்.

# வடக்கு, கிழக்கைத்தான் ஆட்சியாளர்கள் நிர்மூலமாக்கினார்கள் ஏனைய பகுதிகளையாவது வளமாக்க உங்களால் முடிந்ததா?

## கேள்வி எழுப்புகிறார் சுரேஷ் பிறேமச்சந்திரன்

வடக்கு – கிழக்கில் இருந்த தொழிற்சாலைகளை நிர்மூலமாக்கிய ஆட்சியாளர்கள், தெற்கிலாவது தொழிற்சாலைகளை நிர்மாணித்துள்ளார்களா? என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிறேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு –

தமிழர்களுக்கு எத்தகைய உரிமைகளையும் கொடுக்க மாட்டேன் என்று தெரிவித்து அதற்காகவே மக்கள் ஆணையைப் பெற்றுக்கொண்டதாக அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன தெரிவித்தமையுடன் இன்றளவும் தொடரும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறைமையையும் தோற்றுவித்தார். இலங்கையின் ஆட்சியாளர்கள் அனைவரும் தமிழின விரோதப் போக்கை முதலீடாக வைத்தே ஆட்சி செய்து வந்துள்ளனர். இதன் பெறுபேற்றை இன்று நாடே அனுபவிக்கிறது.

1977ஆம் ஆண்டு ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சி அதிகாரத்துக்கு வந்தார். தனது இருப்பை நிலைநிறுத்திக்கொள்ளவும், அரசியல் எதிரியான சிறிமாவோ பண்டார நாயக்கவை அரசியலிலிருந்து அகற்றவும் 1978 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை உள்ளடக்கிய புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கினார். உலகத்திலுள்ள அனைத்து ஜனாதிபதிகளையும்விட அதிகபட்ச அதிகாரங்களைத் தாம் கொண்டிருப்பவராகவும் அவர் தெரிவித்து வந்தார். அந்த அரசியல் சாசனம் இதுவரை இருபதுமுறை திருத்தத்துக்கு உள்ளாகியிருக்கின்றது. 1977ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ் மக்கள்மீதான பாரிய தாக்குதல்களுக்கும் அவரே காரணகர்த்தாவாக இருந்தார். தமிழ் இளைஞர்களை சுட்டு வீதியில் வீசியதும் அவரது ஆட்சிக்காலத்திலேயே ஆரம்பமானது.

தமிழ்த் தேசிய இனவிடுதலைக்கான ஆயுதப்போராட்டக் களத்தையும் அதன் அவசியத்தையும் உருவாக்கியதும் அவரே. அதன் பின்னர் இந்தப் போராட்டத்தை அடக்குவதற்காக, இஸ்ரேலிய மொசாட்டின் ஆலோசனைகளைப் பெற்று, தமிழினத்துக்கு எதிராக யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியவரும் அவரே. தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையே பிளவுகளை ஏற்படுத்தி, தமிழ் முஸ்லிம் தரப்புகளை மோதவிடக்கூடிய அளவிற்கு மொசாட்டின் ஆலோசனைகளைப் பெற்று செயற்படுத்தி வந்தமை மாத்திரமல்லாமல், யுத்த தளபாடங்களைப் பெற்றுக்கொள்வதற்கான நிதியை சேகரிப்பதற்கு மகாவலி திட்டத்தை காரணம் காட்டி பல மில்லியன் ரூபா பெறுமதியான ஆயுத தளவாடங்களைக் கொள்முதல் செய்தமை மட்டுமன்றி, இதுவரை மகாவலி நீரே செல்லாத முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி 'டு' வலயம் என்பதை உருவாக்கி, அங்கு வசித்துவந்த தமிழ் மக்களை விரட்டியடித்து, மணலாறு என்ற தமிழ்ப் பிரதேசத்தை வெலி ஓயா என்ற சிங்களப் பெயருக்கு மாற்றியவரும் அவரே.

முப்பதுவருடகால நீண்ட யுத்தத்திற்கு அடித்தளமிட்டு, வடக்கில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் பொய்யான திட்டத்தை முன்மொழிந்து, சர்வதேச சமூகத்தின் கண்களில் மண்ணைத்தூவி கடன்களைப் பெற்று, அவர் ஆரம்பித்த யுத்தத்தை அவருக்குப் பின்வந்த அனைத்து ஜனாதிபதிகளும் பின்பற்றினர்.

மஹிந்த ராஜபக்ஷ அனைவருக்கும் ஒரு படி மேலே சென்று தமிழர்களுக்கான உரிமைகளைத் தாம் தருவதற்குத் தயாராக இருக்கிறேன் எனவும் அதற்குப் பயங்கரவாதம் தடையாக இருப்பதாகவும் கூறி சர்வதேச சமூகத்தைப் பிழையாக வழிநடத்தி அளவு கணக்கின்றி கடன்களையும் நிதியுதவிகளையும் ஆயுதங்களையும் பெற்று, 2009 இல் முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்கும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்படுவதற்கும் பல பில்லியன் ரூபா சொத்திழப்பிற்கும் காரணமாக அமைந்தார்.



தற்பொழுது மஹிந்தவின் தம்பி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் முழுநாடும் திவாலான நிலைக்குச் சென்றது மாத்திரமல்லாமல், மின்சாரம், எரிபொருள், அத்தியாவசிய மருந்துகள் உட்பட அனைத்து அத்தியாவசியப் பொருள்களின் விலை பன்மடங்கு அதிகரித்திருப்பதுடன், அவற்றிற்கான தட்டுப்பாடும் நிலவுகிறது. அவைகளைத் தேடி அலைவதே மக்களின் நாளாந்த வேலையாக அமைந்திருக்கிறது.

இதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தனர். ராஜபக்ஷ குடும்பத்தினரையே வீட்டுக்குப் போகும்படி கூறினர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியை ராஜினாமா செய்திருந்தாலும் ஜனாதிபதி அந்தப் பதவியில் தொடர்ந்தும் இருப்பதுடன் ஏனையவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தொடர்கின்றனர்.

ராஜபக்ஷ தரப்பினர் ஏதோவொரு வகையில் நாடாளுமன்றத்தையும் ஆட்சி அதிகாரத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு முயற்சி செய்கின்றனர். ஆனால், திவாலான இலங்கையின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவதற்கு ஜனாதிபதியாலோ, அவரது கட்சி சார்ந்த வேறு நாடாளுமன்ற உறுப்பினர்களாலோ முடியாத காரணத்தால், தேர்தலில் தோற்று, தேசியப் பட்டியலில் நாடாளுமன்றம் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கி, பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த முடியும் என்று ஜனாதிபதி கனவு காண்கின்றார்.

ஜனாதிபதியினாலோ, அல்லது அவரது கட்சியினாலோ நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த முடியவில்லை என்றால் ஜனாதிபதிக் கதிரையிலோ அல்லது நாடாளுமன்றக் கதிரையிலோ அவர்கள் ஒட்டிக்கொண்டிருப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

இது ஒருபுறமிருக்க, ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக வந்ததன் பின்னர் மக்களை அச்சுறுத்தக்கூடிய வகையில், அறிக்கைகள் விடுவதைத் தவிர அவரால் எதுவும் செய்ய முடியவில்லை. மஹிந்த தரப்பினர் தட்டாத அல்லது தட்ட முடியாத கதவுகளைத் தட்டி கடன்களைப் பெறுவதற்கான வல்லமை ரணிலுக்கு இருக்கிறது என்பதைத் தவிர, வேறு எந்த தனிப்பட்ட திறமையும் அவரிடமும் இல்லை. நாட்டை ஒரு தரப்பிடமிருந்து மற்றத்தரப்பிற்கு அடமானம் வைத்து கடன் பெறுவது மட்டுமே தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஒருவரிடமும் நாட்டை நுகர்வுப் பொருள் உற்பத்தியை அதிகரித்து, இறக்குமதியைக் குறைத்து, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் திட்டம் இல்லை. மேலும் இன்றைய ஆட்சியாளர்கள் ஒருவரிடமும் நாட்டுப் பற்றையும் காணமுடியவில்லை.

வடக்கு, கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரங்களைத் தமிழ் மக்கள் கேட்டபொழுது, அதனைக் குண்டுவீசி அழித்தீர்கள். அங்கிருந்த ஒருசில தொழிற்சாலைகளையும் குண்டுவீசி நிர்மூலமாக்கினீர்கள். வடக்கு, கிழக்கில்தான் இந்தக்கதி என்றால் நீங்கள் காலாதிகாலமாக ஆட்சி செய்யும் தென்பகுதியில் எத்தனை தொழிற்சாலைகளை உருவாக்கியிருக்கிறீர்கள்? அங்கும்கூட இன்று பாணுக்கும் பருப்பிற்கும் எரிபொருளுக்கும் எரிவாயுவிற்கும் மக்கள் நாளாந்தம் வரிசையில் நிற்கும் நிலையைத்தானே உருவாக்கியிருக்கிறீர்கள். குரங்கிற்குக் கூடு கட்டத் தெரியாது. ஆனால் அதற்கு பறவைகள் கட்டிய கூட்டை சின்னாபின்னமாக்கத் தெரியும். அதைப் போலவே இலங்கையை சீர்படுத்துவதற்குப் பதிலாக அதனைச் சின்னாபின்னப் படுத்தும் வேலையையே எமது ஆட்சியாளர்கள் அனைவரும் செய்துவந்திருக்கிறார்கள்.

ஆகவே இன்றைய இந்த நிலைக்கு ஜே.ஆரிலிருந்து இன்றுவரை ஆட்சிப்பொறுப்பில் இருக்கும் அனைவரும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தேசிய இனப்பிரச்சினை தீராமல் நாடு அபிவிருத்தி அடையாது என்று கூறியுள்ளார். அதனை வரவேற்பது போன்று பிரதமர் ரணிலும் புலம்பெயர் உறவுகளின் முதலீட்டை எதிர்பார்த்திருக்கிறேன் எனக் கூறுகிறார். ஆனால், தமிழர்கள் முன்புபோல் ஏமாறத் தயாரில்லை. இதய சுத்தியுடன் தேசிய இனப்பிரச்சினைத் தீர்விற்கான முன்மொழிவுடன் ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை அரசாங்கம் முன்வைக்குமாக இருந்தால் அனைத்து தமிழ் மக்களும் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்கு தயாராகவே உள்ளனர். – என்றுள்ளது.

# சஹ்ரானின் மனைவிக்கு எதிராக குற்றப்பத்திரிகை இணைப்பு ஆவணங்கள் தமிழில் வழங்கப்பட்டன!

(பாறுக் ஷிஹான்)

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை தாக்குதல்களின் பிரதான குண்டுதாரியான சஹ்ரான் ஹாஷிமின் மனைவிக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சட்ட மா அதிபர் தாக்கல் செய்துள்ள குற்றப் பத்திரிகை தொடர்பிலான இணைப்பு ஆவணங்கள் அனைத்தும் தமிழ் மொழி மூலம் வெள்ளிக்கிழமை அவருக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த வழக்கு கல்முனை மேல் நீதிமன்ற நீதிவான் ஜயராம் ட்ரொக்ஸி முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோதே இவ்வாறு அவை கையளிக்கப்பட்டன.

கடந்த தவணையின்போது சஹ்ரானின் மனைவி சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய சட்டத்தரணி, பிரதிவாதிக்கு எதிரான சான்றாக முன்வைக்கப்படும் அவரின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சிங்கள மொழியில் உள்ளதால், அதன் தமிழ் மொழிபெயர்ப்பு அவசியம் என நீதிமன்றில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதற்கமைய குற்றப்பத்திரத்தின் இணைப்பு ஆவணங்கள் சிங்கள மொழியில் காணப்படுகின்றமையால் அவை தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்படல் வேண்டும் எனவும் அப்போதே பிரதிவாதிக்கு தன் பக்க நியாயங்களை முன்வைக்க முடியுமாக இருக்கும் எனவும் ஹாதியா




வின் சட்டத்தரணியால் சுட்டிக்காட்டப்பட்து.

அதன்படி கடந்த தவணையில் நீதிமன்றம் விடுத்த உத்தரவுக்கு அமைய பிரதிவாதியான சஹ்ரானின் மனைவிற்கு எதிரான குற்றப்பத்திரத்தின் இணைப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்பு குறித்த வழக்கு விசாரணையின்போது அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரனால் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணியிடம் கையளிக்கப்பட்டது.

மீண்டும் நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸால் எதிர்வரும் ஜுலை மாதம் 21 திகதிக்கு குறித்த வழக்கு மறுதவணை இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது சஹ்ரான் ஹாஷிமின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியா பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

# சுகாதார ஊழியர்களுக்கு விசேட விடுமுறை திட்டம்!

எரிபொருள் நெருக்கடி காரணமாக சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு விசேட வாராந்த விடுமுறை திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சுகாதாரத்துறை ஊழியர்கள் அனைவருக்கும் வார நாள்களில் இரண்டு அல்லது மூன்று நாள்கள் விசேட விடுமுறை வழங்கப்படவுள்ளது சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு எரிபொருள் நிரப்புவதில் முன்னுரிமை அளிக்கும் வகையில் வழங்கப்பட்ட அட்டையும் பயனற்றுப் போயுள்ளதன் காரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி அட்டையைப் பயன்படுத்தி எரிபொருள் நிரப்ப முயற்சித்த சமயத்தில் சில மருத்துவர்கள் அச்சுறுத்தப்பட்டிருந்தமையுடன், அவர்கள் மீது தாக்குதல் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதனையடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் சுகாதாரத்துறை ஊழியர்களுக்கான விசேட விடுமுறைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சுகாதாரத்துறை ஊழியர்களின் மேலதிக நேரக்கொடுப்பனவில் கடந்த மாதம் வெட்டப்பட்ட தொகையை எதிர்வரும் மாத சம்பளத்துடன் சேர்த்து வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கிளவுட் கம்ப்யூட்டிங்


## நுட்பியல் அவத்தை

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

கிளவுட் கம்ப்யூட்டிங் நுட்பியல் அவத்தையில் புயலாக மாறியுள்ளது. நிறுவனங்கள், தங்கள் தற்போதைய தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பை கிளவுட் கம்ப்யூட்டிங்கிற்கு மாற்ற ஆரம்பித்துள்ளன. பொது கிளவுட், சொந்த தனியார் கிளவுட், ஹைப்ரிட் கிளவுட் (பொது மற்றும் தனியார் கிளவுட்) ஆகிய கிளவுட் கம்ப்யூட்டிங் சேவையுடன் நிறுவனங்கள் இணைந்து நகர்கின்றன.

இருந்தாலும், இன்னும் சில தயக்கங்கள் உள்ளன. இது சரியா? எதிர்கால விளைவுகள் என்ன? என்ற சிந்தனைகளும் இல்லாமல் இல்லை, இதனால் இன்னும் பலர் இதில் தம்மை ஈடுபடுத்துவதில் தயக்கம் காட்டுகிறார்கள். சென்ற தொடரைவாசித்தவர்கள் கிளவுட் கம்ப்யூட்டிங்கின் நன்மைகளோடு அதன்சிக்கல்களையும் குறிப்பிடுங்கள் என்று கேட்டிருந்தார்கள். அதற்கமைய கிளவுட் கம்ப்யூட்டிங்கின் நன்மைகள் மற்றும் அதிலுள்ள சிக்கல்கள் பற்றிப் பார்க்கலாம்.

கிளவுட் கம்ப்யூட்டிங்கின் நன்மைகளை சென்ற தொடரிலும் குறிப்பிட்டிருந்தேன். மேலும் சில நன்




மைகளை இங்கு பார்க்கலாம்.

கிளவுட் கம்ப்யூட்டிங் சேவைகளின்படி கிளவுட் கம்ப்யூட்டிங் மூன்று முக்கிய வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது: 1. உள்கட்டமைப்பு சேவை (IaaS) 2. சேவை இயங்குதளம் (PaaS) 3. மென்பொருள் சேவை (SaaS).

இங்கு இந்த எல்லா வகைகளிலும், வன்பொருளுக்கோ அல்லது எந்த உள்கட்டமைப்பிற்கோ முதலீடுசெய்யத்தேவையில்லை. கிளவுட்கம்ப்யூட்டிங்கை தேர்ந்தெடுப்பதன் மூலம், பல வழிகளில் செலவைச் சேமிக்க முடியுமென்கிறார்கள்.

அடுத்து, கிளவுட் சேவைகளை உலகம் முழுவதிலுமிருந்து எளிதாக அணுகும் வாய்ப்பை வழங்குகின்றன. எந்த நேரத்திலும், எங்கும் எந்த சாதனத்திலிருந்தும், முழுமையாக அணுக வாய்ப்புள்ளது. இங்கு எது பயன்படுத்தப்படுகிறதோ அதற்கு மட்டுமே பணம் செலுத்த வேண்டும். அதாவது தொலைபேசி அல்லது மின் கட்டணம் போன்று பாவனைக்கு மட்டும் செலுத்தப்படுவதாகும். ஆனால் பொதுவாக பார்த்தால் தகவல் தொடர்பாடல் உள்கட்டமைப்பில் முழுத் தொகையையும் ஒரே நேரத்தில் செலவிட வேண்டும். அந்த வளங்களை உகந்ததாகப் பயன்படுத்துவது மிகவும் அரிது, இதனால், முதலீடு வீணாகிறது. ஆனால், கிளவுட் கம்ப்யூட்டிங்கில் அவ்வாறு நிகழாது. மேலும், பயன்பாடுகள் மற்றும் சேவைகளின் நம்பகத்தன்மை மற்றும் விரைவாகக் கிடைக்கும் தன்மையை கிளவுட் கம்ப்யூட்டிங் கொண்டுள்ளது.

கிளவுட் கம்ப்யூட்டிங்கின் மற்றொரு முதன்மை நன்மை என்னவென்றால், இது பல திட்டங்கள் மற்றும் கிளை அலுவலகங்களிலிருந்து அனைத்து தரவையும் ஒரே இடத்திற்கு மையப்படுத்துகிறது. தகவலைச் சரிபார்க்க தனிப்பட்ட இடங்களுக்குச் செல்லத் தேவையில்லை ஓர்இடத்தில் எல்லாமே கிடைக்க





வாய்ப்புள்ளது.

பொதுவாக தகவல் தொடர்பாடல் சேவையில் தரவு இழப்பு வணிகத்தை, ஒரு தொழிலை கணிசமாக பாதிப்பதைப்பார்க்கிறோம். முக்கியமான தகவல்களை இழக்க நேரிடலாம், இதனால் பெரும் தொகையை செலவழிக்கலாம், ஒவ்வொருவரின் மதிப்புமிக்க நேரத்தை வீணடிக்கலாம். இதனைத் தடுக்க, தானாகவே எல்லா தரவையும் கிளவுட்க்கு ஒரு வழக்கமான அடிப்படையில் காப்புப் பிரதி எடுக்கலாம். தற்செயலான நீக்கம், இயற்கைப் பேரிடர் காரணமாக இழப்பு அல்லது ஹார்ட் டிரைவ் செயலிழந்தால், எந்தவொரு தரவையும் மீட்டெடுக்க கிளவுட் கம்ப்யூட்டிங் உதவுகிறது. இதற்காக மிகப்பெரிய கிளவுட் ஸ்டோரேஜ வசதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இன்றைய நுட்பியல் யுகத்தில் பெரிய தலையிடியாக இருப்பது ஒவ்வொரு முறையும் கணனியை அதன் சிஸ்டத்தைப் புதுப்பிப்பது, இது வெறுப்பூட்டும் பணியாக இருக்கிறது. ஒவ்வொரு தனிநபருக்கும் கணினியைப் புதுப்பிக்க வேண்டும், இது நேரத்தை வீணடிப்பது மட்டுமல்லாமல் உற்பத்தித்திறனை பாதிக்கிறது. ஆனால் கிளவுட் கம்ப்யூட்டிங்கைப் பயன்படுத்தினால், அவை பயனர்களின் ஈடுபாடு இல்லா




மல் தானாகவே புதுப்பிக்கப்படும். இவ்வாறான பல நன்மைகளை கிளவுட் கம்ப்யூட்டிங் தந்தாலும் அதன் சிக்கல்கள் பற்றியும் குறிப்பிடப்படுகின்றது.

முதலில் கிளவுட் கம்ப்யூட்டிங் சேவையைப் பெறுவதற்கு நல்ல அலைவரிசையுடன் நல்ல வேகமான இணைய சேவை தேவை. அதாவது, கோப்புகளை பதிவேற்ற அல்லது பதிவிறக்கம் செய்ய சிறந்த வேகமான இணைய இணைப்பு தேவையெனலாம். வேகமான சிறப்பான அலைவரிசை இணைய இணைப்பு கிடைக்காவிட்டால் கிளவுட் கம்ப்யூட்டிங் சேவை செயலிழக்கும் வாய்ப்பு எப்போதும் உள்ளது, இதனால் வணிகம் செயலிழக்க நேரிடலாம். கிளவுட் கம்ப்யூட்டிங் சேவையைப் பெறும் ஒருவர் கிளவுட்டின் உள்கட்டமைப்பின் உரிமையாளராக இல்லாததால், அவரிடம் எந்தக் கட்டுப்பாடும் இல்லை. கிளவுட் சேவைகளின் பெரிய பட்டியல் வழங்கப்படுகின்றது. ஆனால் அவற்றைப் பயன்படுத்துவதில் நிறைய கட்டுப்பாடுகள் உள்ளன. ஒரு வகை வரையறுக்கப்பட்ட அணுகல் தன்மையே காணப்படுகின்றது.

கிளவுட் கம்ப்யூட்டிங்கில் பயனர்கள் தங்களது உள்கட்டமைப்பு மற்றும் அதன் நிர்வாகத்திற்கான செலவைச் சேமித்தாலும், அதனைப்பயன்படுத்தும் வரை சேவைகளுக்குப் பணம் செலுத்திக்கொண்டே இருக்க வேண்டும். இது தொடர்ச்சியாக நடைபெற




றுக்கொண்டிருக்கும் ஆனால் ஒரு நிறுவனம் உள்கட்டமைப்பை தானே உருவாக்கினால் ஒரு முறை மட்டுமே முதலீடு செய்ய வேண்டியிருக்கும் என்பது கவனிக்கத்தக்கது. அதன்பின் அந்தச் செலவு இல்லையெனலாம். கிளவுட் கம்ப்யூட்டிங்கில் தரவு பாதுகாப்பு என்பது அனைவருக்கும் ஒரு பெரிய கவலை தரும் விடயமாகவும் உள்ளது. கிளவுட் கம்ப்யூட்டிங் இணையத்தைப் பயன்படுத்துவதால், தரவு பாதிக்கப்படலாம். கிளவுட் கம்ப்யூட்டிங் சேவைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு முன், தரவுப் பாதுகாப்பிற்கான அதிகபட்ச இணக்கக் கொள்கைகளைப் பின்பற்றும் வழங்குநரைக் கண்டறிய வேண்டும்.

கிளவுட் கம்ப்யூட்டிஙகில் தரவின் முழுமையான பாதுகாப்பிற்காக, ஓரளவு விலையுயர்ந்த தனியார் கிளவுட் கம்ப்யூட்டிங் அல்லது ஹைப்ரிட் கிளவுட் கம்ப்யூட்டிங்கை கருத்தில் கொள்ள வேண்டும், அங்கு பொதுவான தரவு பொது கிளவுட்டில் இருக்கும் மற்றும் வணிக அல்லது முக்கியமான தரவு தனியார் கிளவுட்டில் வைக்கப்படும்.

மேலும் கிளவுட் கம்ப்யூட்டிங் சேவை வழங்குநர்கள் ஒரு பயனரை அவர் விரும்பும் போது வேறு எந்த சேவை வழங்குநருக்கும் மாற அல்லது இடம் பெயர அனுமதிப்பதாக உறுதியளித்தாலும், அது மிகவும் கடினமான செயலாகும். இடம்பெயர்வின் போது, நீங்கள் இணக்கத்தன்மை, இயங்குதன்மை மற்றும் ஆதரவு சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடலாம் என்று வல்லுனர்கள் தெரிவிக்கிறார்கள். மேலும் ஒரு வாடிக்கையாளர் தொழில்நுட்ப வல்லுநராக இருந்தாலும், தொழில்நுட்பச் சிக்கல்கள் ஏற்படும் போது அதனைத்தீரப் பதில் சிக்கல்களை எதிர்நோக்குகிறார். அவ்வாறான ஒரு சிக்கலின் போது எல்லாவற்றையும் உள்நாட்டில் தீர்க்க முடியாது. சேவை வழங்குநரைத் தொடர்புகொண்டு ஆதரவு கேட்டாக வேண்டும். ஆனால் ஒவ்வொரு கிளவுட் கம்ப்யூட்டிங் சேவையாளர்களும் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு 24/7 ஆதரவை வழங்குவதில்லை என்பதும் இதிலுள்ள சிக்கலாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்

## ரணிலும் கோட்டாவும்

அங்கம் 24

தந்தை செல்வா காலத்திலிருந்து தொடர்ந்த இணக்க முயற்சிகள் எவையுமே கைகூடாமல், அவர் கடைசியாக வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஆதரித்தார்.

சிங்களவர்களுடனான இந்தக் கட்டாய திருமண பந்தத்தில் இனிமேலும் சேர்ந்து வாழ்வது இயலாதது, தங்களுக்கு விவாகரத்து வேண்டும் என்பதே தமிழர்களின் அந்தத் தீர்மானத்தின் சாரம். அதனைக் கேட்டமைக்காக ‘பிரிவினைவாதிகள்’, ‘தேசத் துரோகிகள்’ எனக் குற்றம் சுமத்தி நடத்தப்பட்ட அட்டூழியங்கள் பல. அவை வளர்ந்து, விடுதலைப் போராக மாறி, தமிழ் ஈழத்தின் பல காவியங்கள், பரணிகள் எழுதப்பட்டு, கடைசியில் ஒடுக்கி, அடக்கப்பட்டன.

அவற்றின் காரணங்கள், பின்னணிகள் தங்கள் தங்கள் உணர்வுகளுக்கு ஏற்ப ஒவ்வொருவர் மனதிலும் உள்ளன.

தந்தை செல்வா ‘நாங்கள் சிங்கள மக்கள் கொண்டுள்ள அமோக அதிகாரங்களில் இருந்து வெளியேற வேண்டும், அன்றில் அழிந்து விடுவோம்’ என்றார். அதுமட்டுமல்ல, ‘தனி நாடு பெற்றுக் கொள்வது என்பது சுலபமான காரியம் அல்ல. இது மிகவும் கஷ்டமான காரியம். அதனை நாங்கள் அறிவோம்’ என்றும் கூறி வைத்தார்.

இந்தியாவின் அனுசரணை இல்லாமலும், அதனது பிராந்திய நலன்களுக்கு உகந்ததாக அமையாமலும் தனி நாடு ஒன்று ஏற்படுவதை இந்தியா ஏற்காது என்பது தமிழ் மக்களுக்கு விடுதலைப் போரில் அவர்களின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட போது கட்டாய பாடமாகச் சொல்லப்பட்டிருந்தது.

இந்த அரிச்சுவடியை அறிந்திருந்தும், தமிழீழம் என்பதை ஆயுத பலத்தால் திணிக்க எடுத்த அணுகுமுறைகளின் எதிரொலி தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கிறது.

நாடுகடந்த தமிழீழ அரசின் ஆதரவாளர்கள் கடந்த 12 ஆண்டுகளில் தாங்கள் புலம்பெயர்ந்துள்ள நாடுகளில் தங்களது கூட்டங்களை வைத்தார்கள். காலிமுகத்திடல் போராட்டம் அனுசரணையாக இருக்குமோ என்ற எண்ணத்திலோ என்னவோ இம்முறை தமிழ் நாட்டில் நடத்தப்பட்ட மாநாடு பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டு பலர் கைது செய்யப்பட்டார்கள். இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தனிநாடு அமைப்பதுதான் வழி, ஆனால் ஆயுதப் போராட்டத்தை விட்டு அதற்கு ஏதுவான மாற்று வழிகளில் செல்லலாம் என இவர்கள் எண்ணுகிறார்கள்.

பன்னாட்டு சமூகத்திடமிருந்து தமிழ்ச் சமூகம் போன்ற பாதிக்கப்பட்ட இனக் குழுமங்கள் எதிர்பார்ப்பது வல்லரசுகள் தங்கள் ஆயுத பலத்தைப் பாவித்து, தங்களின் ஆதிக்கத்தையும் அடக்குமுறையையும் திணிக்காதிருப்பதும், ஒரு மக்களுக்கு எதிராகப் பழிவாங்கல்கள் நடத்தப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதும் தான்.

அரசாங்கத் தலைவர்கள், சர்வதேச அமைப்புக்கள், மறை அமைப்புகள், மனிதாபிமான அமைப்புகள் பலம் குறைந்த இனங்கள் மீது தங்களது பொறுப்பை மனச்சாட்சிக்குரிய விதமாக நிறைவேறுவதாகும்.

தமிழ் மக்களின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட போது, சுதந்திரம் அடைந்த நாள்களிலிருந்து அதுவரை சிங்களப் பெரும்பான்மையிடம் அவர்கள் அனுபவித்த அட்டூழியங்களை இந்தியாவோ, அதை விடுத்து சர்வதேச சமூகமோ அறியாதவை அல்ல.



சர்வதேசஜக் கரிசனையோ நாட்டுக்கு நாடு வேறு விதமாக இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் அணுகுமுறைகள் அமைய வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையால் 1999இல் சர்வஜன வாக்குரிமைக்கு அனுசரணை தரப்பட்டு, 27 செப்ரெம்பர் 2002 இல் சுதந்திர நாடாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கிழக்குத் திமோர் தீவைப் பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தேன். விகிதாசாரத்தில் அந்த நாட்டு மக்கள் அடைந்த இன்னல்களும் அவர்கள் எதிர்கொண்ட அட்டூழியங்களும், தமிழ் தமிழ் மக்கள் எதிர்கொண்டவற்றுடன் ஒப்பிடும்போது குறைவானவையே. ஆனாலும் சர்வதேசத்தின் அணுகுமுறை அவர்களைப் பொறுத்தவரை வேறுவிதமாகவும் ஆதரவாகவும் இருந்தது. அதற்கு அந்த ஆதரவுகளை முன்னெடுத்த தலைவர்களைச் சொல்ல வேண்டும்.

ஆனால் தமிழ் மக்கள் அப்படியான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள புவியியல், அரசியல் சூழ்நிலைகளைத் தவிர தாங்களே அவற்றுக்கு தடைக்கல்லாக, ஏதும் படிக்கட்டுகள் சமைக்காதவர்களாக இருக்கிறார்கள். இதனை எழுதும் பொழுது புலம்பெயரில் உள்ள பலர், தாங்கள் அந்தந்த நாட்டின் அரசாங்கங்களுக்கு நிலைமைகளைத் தெளிவுபடுத்தி சமர்ப்பணம் கொடுக்கிறோம், கனடாவில் தமிழ் மக்களின் இனப் படுகொலை நினைவு தினம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்றெல்லாம் சொல்வது கேட்கிறது. இவை செய்யப்படுகின்றனதான். ஆனால் அவற்றின் தாக்கங்கள் எந்த அளவில் தமிழ் மக்களின் அரசியல் குறிக்கோளை சர்வதேச மட்டத்தில் – ஐ.நாவில் – முன்னெடுக்கப்படுகின்றன என்பதுதான் கேள்வி. இப்பொழுதிலும் பார்க்க பன்மடங்கு போர்க் காலங்களில் பிரச்சாரங்களாக, ஆர்ப்பாட்டங்களாகத் தமிழ் மக்கள் தங்களது இன அழிவைத் தடுக்க சர்வதேசத்தின் தலைநகர்களில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டார்கள். ஆனால் கடைசியில் அந்த நாடுகளின் நிலைப்பாடுகள் எவையாக இருந்தன? இன்னும் தமிழ் மக்களுக்கான கரிசனையை அவர்கள் தெரிவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அரசியல் தீர்வில் எதனை ஆதரிக்கிறார்கள் என்பதில் திடமான நிலைப்பாடு அறிவிக்கப்பட்டதில்லை.

நாடு வங்குரோத்தானதும், ஏனைய நாடுகள் எல்லாம் முன் நின்று அதனைப் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்க வேண்டும் என்ற குறிக்கோளில்தான் செயற்படுகின்றன.

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை உள்ளடக்கியே ஐ.நா. மனித உரிமைகள் மன்றின் கடந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 13 ஆம் திருத்தத்தின் முன்னோடியாக இலங்கை – இந்திய ஒப்பந்தம் இருந்தது. ஆனால் அந்த 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதிலேயே பல சிக்கல்கள். அதைச் செய்வதற்கான மனமின்மை ஒரு காரணம். அதே சமயம் அதுதான் முடிவான தீர்வா என்ற தமிழ் மக்களின் அங்கலாய்ப்பு அடுத்த காரணம்.

ராஜபக்ஷகளின் ஊழல் நிறைந்த ஆட்சியும், கோட்டா பதவிக்கு வந்த இரண்டுவருடங்களில் நடைமுறைப்படுத்திய நிர்வாக திட்டங்களுமே நாட்டை இப்படியான பொருளாதாரச் சிக்கலில் விட்டுள்ளன. அரசு நிர்வாகங்களில் நேர்மை, அதில் மாற்றங்கள் என்பவை பிரதான கோரிக்கைகளாக ‘கோட்டா கோ ஹோம்’ போராட்டக்காரர்கள் முன்வைக்கப்பட்டன. இவ்வளவு நடந்தும் அவருக்கு (கோட்டாவுக்கு) அது புரிவதாக இல்லை என்று அவருடன் நெருக்கமாகப் பழகியவர்கள் கூட விவரிக்கிறார்கள்.

கோட்டா கூடத் தான் முழு மந்திரி சபை உருவாக்கியதும் பதவி விலகுவேன் என்று ஊடகச் செய்திகள் வருவதற்கு மறுப்பு தெரிவித்து, தான் பதவி விலகப் போவதில்லை என்றும், ரணிலுடன் சேர்ந்து பொருளாதாரச் சிக்கலில் இருந்து நாட்டை மீட்டு எடுப்பேன் என்றும் கூறுகிறார். நாட்டின் மற்றப் பிரச்சினைகள் பற்றியோ, போராட்டக்காரர்கள் கோரும் மற்றச் சீர்திருத்தங்கள் பற்றியோ அவர் அலட்டிக் கொண்டவராகத் தெரியவில்லை.

ரணிலும் பொருளாதாரச் சிக்கல் பற்றியே பேசுகிறார். தான் ஆபத்பாந்தவனாக வந்திருக்கிறார் என்கிறார்.

ஆக இவர்கள் இருவரது கணக்கீட்டில் பொருளாதாரச் சிக்கலை உருவாக்கிய நிர்வாக திறமையின்மை, ஊழல் கலாச்சாரம், அரசியல் அனுசரணைகள், அரசியல் கோட்பாடுகளை குறிப்பெடுத்து அவற்றை மாற்றும் எண்ணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

பதவியில் தொடர்வதற்கு ரணிலுக்கு கோட்டா தேவை, கோட்டாவுக்கு ரணில் தேவை என்ற கோதாவில் விடயங்கள் முன் நகர்கின்றன.

ரணிலின் காலத்தில் அவரது நிதி மந்திரி ரவி கருணாநாயக்க மத்திய வங்கி பிணை முறி ஊழல் செய்திருந்தார். மத்திய வங்கி ஆளுநராக அப்போது இருந்தவர் ரணிலின் நண்பர் மகேந்திரன். அப்பொழுது இவையெல்லாவற்றுக்கும் காலாக இருந்த ரணிலை மத்திய வங்கிக்குப் பொறுப்பாக விடமுடியாது என்று விமல் வீரவன்ஸ, கம்மன்பில்ல போன்றோர் துள்ளிக் குதித்தார்கள். ஆனால் இன்று அதே மத்தியவங்கி ரணிலின் அதிகாரத்தில், நிதியமைச்சரான அவரின் கீழ் வருகிறது. தற்பொழுது நந்தலால் வீரசிங்க மத்திய வங்கியின் ஆளுநர். பிணை முறி ஊழல் நடந்தபோது அவர் பிரதி ஆளுநராக இருந்து, அவை பற்றிய தகவல்களைக் கசிய விட்டார் என ரணில் தரப்புக்கு வன்மம் உண்டு. ஆகவே ஆளுநருக்கு நிர்வாகச் சிக்கல்கள் வரலாம். அவர் தனக்கேன் தலைவலி என்று வெளியேறலாம்.

அதேசமயம் மக்கள் வங்கியில் பெருந்தொகை முறையற்ற விதங்களில் சுருட்டப்பட்டதாகவும், இவற்றின் பயனாளிகள் பலரும் ரணிலின் கூட்டாளிகள் என்றும் தெரியவருகின்றது. அப்படியாயின் யாரை யார் பார்த்து ஊழல்வாதிகள் என்பது, போங்கடா போங்க என்ற சித்தாந்தம் தான். வங்கிகளில் இருப்பவற்றையே கவனிக்க தெரியாதவர்கள், மக்கள் சொத்துக்களை சூறையாடியவர்கள் இன்று எவ்வித நாணமும் இல்லாமல், புலம்பெயர் சமூகம் நிதி அனுப்பி நாட்டுக்கு உதவ வேண்டும் என்று கேட்கிறார்கள்.



அவை முறையாக நிர்வகிக்கப்படுமா என்ற கேள்விகள் உண்டு.

இருவரது அணுகுமுறையும் வாங்கக் கூடிய கடன்களை வாங்கி, உதவிகளைப் பெற்று, அத்தியாவசிய தேவைகளுக்கான முதலைத் தேடி, மக்களைப் பட்டினி இல்லாத் நிலைமைக்கு உயர்த்துவது தான். அதை முன்னெடுப்பதற்கு, தங்களது வர்க்க அரசியலைப் பாதுகாப்பதற்கு, இனவிரோதத்தைத் தொடர்வார்கள். ஆகவே இவர்களிடமிருந்து காலிமுகத்திடலின் உந்துதலால் இனப்பிரச்சினைக்கான எந்தத் தீர்வும் தரப்பட மாட்டாது என்பது திண்ணம்.

(வளரும்....)

## ஹம்பாந்தோட்டை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையங்களை நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, டி.வி.சனக ஆகியோர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

## வரும் சித்திரையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் – சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் – நடத்தப்படலாம்.

2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடைக்கும். இதனையடுத்து உடனடியாக நாடாளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் எனக் கூறப்படுகிறது.

## வவுனியா இராமனூர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வவுனியா, புளியங்குளம், இராமனூர் பகுதியில் உள்ள மக்கள் குடிமனைகளை அண்டியதாக வயல் நிலங்கள் காணப்படுகின்றன. இந்நிலையில் அருகில் உள்ள சிறிய காடுகளின் ஊடாக 15 இற்கும் மேற்பட்ட யானைகள் கூட்டமாக வருகை தந்து வயல் வெளிகளில் நேற்று மாலை நடமாடித் திரிந்தன.

அருகில் உள்ள குடிமனைகளுக்குள்ளும், அருகில் சிறுபோக நெற் செய்கை மேற்கொண்ட வயல்களுக்குள்ளும் யானைகள் வந்து விடுமா என்ற அச்சத்துடன் அப்பகுதி மக்கள் இருந்தனர். எனினும் சுமார் ஒரு மணிநேரத்திற்கு மேலாக வயல் பகுதியில் நடமாடிய யானைக் கூட்டம் பின்னர் காட்டை நோக்கி திரும்பிச் சென்றுள்ளன. இவ்வாறு யானைக் கூட்டம் அவ்வப்போது வந்து செல்வதால் அச்சத்துடன் வாழ்வதாக தெரிவிக்கும் அப்பகுதி மக்கள் தமது பகுதிக்கு யானை வேலிகளை அமைத்து தருமாறும் கோரியுள்ளனர்.

# டக்ளஸின் பதிவு உண்மைக்குப் புறம்பானதே கொதித்தெழுகின்றனர் சுப்பர் மடம் மீனவர்கள்

யாழ்ப்பாணம், மே 30

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்ட பதிவு உண்மைக்கு புறம்பானது என சுப்பர்மடம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அவர்களது அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

வியாழக்கிழமை வடமராட்சியிலுள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் பல சேர்ந்து மீன்பிடி அமைச்சர் கே.என்.




டக்ளஸ் தேவானந்தாவை அவரது அலுவலகத்திற்கு சென்று மண்ணெண்ணெய் தட்டுப்பாடு தொடர்பில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாகக் கதைப்பதற்கு சென்றதாகவும் தாம் தமது கோரிக்கைகளை எழுத்து மூலம் வழங்கிவிட்டு வந்ததாகவும் அதனை மீன்பிடி அமைச்சர் தம்மிடம் சுப்பர்மடத்தில் மீனவர்கள் நடாத்திய போராட்டம் தொடர்பில் மன்னிப்புக் கோரியதாக தனது முகநூலில் பதிவிட்டிருந்ததாகவும் அது உண்மைக்கு புறம்பானது என்றும் சுப்பர் மடம் மீனவர்கள் தெரிவித்தனர்.

## மருத்துவ மாணவர்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்து கலைத்தனர்.

விஹார மகாதேவி பூங்காவிற்கு அருகாமையில் இருந்து மருத்துவ பீட மாணவர்களின் போராட்டம் ஆரம்பமானது.

மருத்துவ பீட மாணவர்கள் நாட்டின் பல பல்கலைக்கழகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினர். ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாதைகளை ஏந்தியவாறு மருதானை டெக்னிக்கல் சந்தி வழியாக புறக்கோட்டையை நோக்கிப் பேரணியாகச் சென்றனர்.

மாணவர்கள் அங்கிருந்து ஜனாதிபதி மாளிகையை நோக்கி முன்னேற முயன்றபோது கொழும்பு உலக வர்த்தக மையத்தை அண்மித்த பகுதியில் பொலிஸார் வீதித்தடைகளை போட்டு ஆர்ப்பாட்டப் பேரணிக்கு தடையேற்படுத்தினர். இதனால் அங்கு குழப்ப நிலை உருவாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டு மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு ஆர்ப்பாட்டம் கலைக்கப்பட்டது. இதனால் அப்பகுதியில் பதற்ற நிலைமை நீடித்தது.

# சிறுபோகத்தில் போதியளவு உரம் கிடைக்க மாட்டாது!

## அமைச்சர் அமரவீர எதிர்வுகூறல்

எதிர்வரும் சிறுபோகத்தில் பயிர்ச்செய்கையாளர்களுக்கு போதியளவு உரம் கிடைக்கப்பெறாது எனவும் உரத்தைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடி நிலவுவதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சிறுபோக பயிர்ச்செய்கைக்கான உர விநியோகம் தொடர்பில் கருத்து வினவப்பட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர –

தற்போதைய நிலையில் பணம் கொடுத்தாலும் உரம் வழங்க எந்த நாடும் தயாராக இல்லை. ஏனெனில் உலகளாவிய உணவுப் பஞ்சம் தொடர்பான எதிர்வுகூறல் காரணமாக எந்த நாடும் உரம் விற்பனைசெய்யதயக்கம்காட்டுகின்றன.

இந்தியாவில் இருந்து நாம் உரம் பெற்றுக்கொள்வதாயினும் இந்தியாவும் வேறு நாடுகளில் இருந்தே இறக்குமதி செய்து நமக்கு வழங்க வேண்டியுள்ளது.

எனவே தற்போதைக்கு சிறுபோக பயிர்ச்செய்கையின் போது உரம் வழங்குவதற்கான உறுதிமொழியை வழங்க முடியாதுள்ளது. ஆயினும் பெரும்போக பயிர்ச் செய்கைக்காவது தட்டுப்பாடின்றி உரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை இப்போதே நாம் முன்னெடுக்கின்றோம்.

எதிர்வரும் காலங்களில் உள்நாட்டு உணவுப் பொருள்கள் பயிரிடப்படுவதன் மூலமாக மட்டுமே நம் நாட்டில் ஓரளவுக்கேனும் உணவுப்பஞ்சம் ஏற்படாமல் பாதுகாக்க முடியும் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது ..............................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசமைப்பு மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு சம்பந்தமாக நாட்டு மக்களுக்கு நேற்றிரவு தாம் சிறப்புரையாற்றிய போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங். இவ்வி டயத்தைத் தெரிவித்தார்.

அந்த உரையில் அவர் கூறியவை வருமாறு:-

இன்று, நம் நாட்டில் உள்ள முக்கிய பிரச்சினைகள் பொருளாதாரத் துறையில் மட்டுமல்ல. அரசியல் வட்டாரத்திலும் இரண்டு முக்கிய பிரச்சினைகள் உள்ளன. 19 ஆவது திருத்தச் சட்டத்தை மீள அறிமுகப்படுத்துவது இந்த விடயங்களில் ஒன்றாகும். இது தொடர்பில் கட்சித் தலைவர்கள் என்ற வகையில் தற்போது 21 ஆவது திருத்தச் சட்டத்தை தயாரித்து வருகின்றோம்.

இரண்டாவது விடயம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான முயற்சியாகும். அதற்கான நேரம் மற்றும் வழிமுறைகள் கட்சித் தலைவர்களால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நாடாளுமன் றத்தின் அதிகாரங்கள் பலவீனப்படுத்தப்பட்டதன் காரணமாக நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் முடங்கியுள்ளன. நிறைவேற்றதிகாரத்துக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடியை தடுக்கும் வகையில் நாடாளுமன்றம் செயற்படவில்லை என்பதே இன்றைய பிரதான குற்றச்சாட்டு. நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு பெரும்பான்மை இருந்தும் நாடாளுமன்றப் பணிகளைப் புறக்கணித்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அமைச்சரவை அமைச்சர்களால் அனைத்தும் திட்டமிட்டுக் கட்டுப்படுத்தப்பட்டன.

கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதை நாம் எப்போதும் பார்க்க வேண்டியதில்லை, ஆனால் நாம் பின்பற்றக்கூடிய உதாரணங்கள் சில உள்ளன.

முன்னர் 1931 முதல் 1947 வரை அரசமைப்புச் சபை இருந்தது. அந்தச் சபையானது குழு முறையைப் பின்பற்றிச் செயற்பட்டது. ஒவ்வொரு விடயமும் ஏழு குழுக்களா பிரிக்கப்பட்டன. குழுக்களின் தலைவர்கள் அமைச்சர்கள் ஆனார்கள். ஏழு அமைச்சர்கள் ஓர்ச்அமைச்சரவையை அமைத்தனர். மேலும், ஆளுநரால் நியமிக்கப்பட்ட மூன்று அதிகாரிகள் இருந்தனர்.

மேலும், பொதுப் பணத்தைக் கட்டுப்படுத்த கணக்குக் குழுவும் இருந்தது. அந்த நேரத்தில் இந்த வழிமுறையை வெற்றிகரமாக செயல்படுத்த எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

தற்போது, நாடாளுமன்றத்தின் கட்டமைப்பை மாற்றி, தற்போதுள்ள நாடாளுமன்ற முறை அல்லது வெஸ்ட் மின்ஸ்டர் முறை மற்றும் அரசமைப்பு முறை ஆகியவற்றை இணைத்து புதிய அமைப்பை உருவாக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றம் நாட்டை ஆள்வதில் பங்கேற்கலாம்.

முதலாவதாக, நாணய அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் நாடாளுமன்றத்திற்கு அந்த அதிகாரங்களை வழங்குவதற்கு தற்போதுள்ள சட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும்.

ஐக்கிய இராச்சியம், நியூசிலாந்து மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் முன்மாதிரியைப் பின்பற்றி, நாங் கள் வலுவான மற்றும் சக்திவாய்ந்த சட்டத்தை முன்மொழிகிறோம்.

தற்போது அரசாங்க நிதி தொடர்பாக மூன்று குழுக்கள் உள்ளன. பொது நிதிக் குழு, கணக்குக் குழு மற்றும் பொது நிறுவனங்களுக்கான குழு ஆகிய மூன்று குழுக்கள் ஆகும். இந்த மூன்று குழுக்களின் அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்காக சபைத் தலைவர் தினேஷ் குணவர்தன பல யோசனைகளை முன்வைத்துள்ளார்.

அதற்கு மேலதிகமாக, நாங்களும் பரிந்துரைகளை முன்வைக்கிறோம். புதிய குழுக்களை அமைக்க நாங்கள் செயற்பட்டு வருகிறோம்.

இந்த விவகாரம் குறித்து ஆய்வு செய்ய சட்ட மற்றும் வழிமுறைக் குழுவை நியமிப்போம். இரண்டாவதாக, நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை வங்கிகள் மற் றும் நிதி நிறுவனங்களின் நிதி நிலை. பலவீனமான பிரச்சினைகள் பல இதில் உள்ளன.

எங்களின் நிலையியற் கட்டளை 111 இன் கீழ் நாம் மேற்பார்வைக் குழுக்களை நியமிக்க முடியும். இதற்கு முன் கண்காணிப்புக் குழுக்கள் நியமிக்கப்படவில்லை. எனவே, பத்து மேற்பார்வைக் குழுக்களை நியமிக்க நாங்கள் முன்மொழிகிறோம். அதற்கு நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த ஐந்து நிதிக் குழுக்கள் மற்றும் பத்து மேற்பார்வைக் குழுக்களின் தலைவர்கள் பின்வரிசை உறுப்பினர்களால் நியமிக்கப்படுகிறார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அவர்கள் அமைச்சர்களால் நியமிக்கப்படுவதில்லை.

எனவே, அமைச்சர்கள் அமைச்சரவையில் இருந்து சுயாதீனமான மற்றும் அமைச்சர் மற்றும் நாடாளுமன்றம் ஆகிய இருவருடனும் இணைந்து செயல்படும் ஒரு வழிமுறையை உருவாக்க எங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

தற்போதுள்ள அமைப்பை மாற்ற வேண்டும் என இளைஞர்கள் குரல் கொடுத்து வருகின்றனர். அவர்கள் தற்போதைய பிரச்சினைகளையும் அறிய விரும்புகிறார்கள். எனவே, இந்த 15 குழுக்களுக்கும் தலா நான்கு இளைஞர் பிரதிநிதிகளை நியமிக்க நான் முன்மொழிகிறேன்.

அவர்களில் ஒருவர் இளைஞர் நாடாளுமன்றத்தால் நியமிக்கப்படுவார். மற்ற மூவரும் போராட்டக் குழுக்கள் மற்றும் பிற ஆர்வலர் குழுக்களைச் சேர்ந்தவர்கள். இந்த நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறையை இளைஞர் அமைப்புகளே தீர்மானிக்க முடியும்.

நிபுணத்துவம் பெற்றவர்களை இந்தப் பணியில் ஈடுபடுத்தலாம் என்று நம்புகிறோம். இப்பணியின் மூலம் இளைஞர்கள் தாங்களாகவே பிரச்சினைகளை அறிந்து அதற்கான தீர்வுகளை வழங்க முடியும். அவர்கள் விரும்பினால் தேர்தலில் போட்டியிட முடியும்.

### தேசியக் கவுன்ஸில்

தேசிய கவுன்ஸிலையும் நாங்கள் முன்மொழிகிறோம். சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற் றும் முக்கிய கட்சிகளின் தலைவர்கள் அடங்கிய குழு தேசிய கவுன்ஸில் என்று அழைக்கப்படுகிறது. தேசிய கவுன்ஸில் மிகவும் முக்கியமானது என்றே கூற வேண்டும். நாட்டின் கொள்கைகள் குறித்து இதில் பேசலாம். அமைச்சரவையின் முடிவுகள் குறித்தும் பேசலாம். இந்நாட்டின் நாடாளுமன்ற மறுசீரமைப்பு குறித்தும் பேசலாம். அப்படியானால், அதை அரசியல் அமைப்பு என்று சொல்லலாம்.

அமைச்சர்கள் மற்றும் குழுக்களின் தலைவர்களை அழைக்க தேசிய கவுன்ஸிலுக்கு உரிமை உண்டு. நாம் முன்வைத்துள்ள புதிய முறைமையின்படி ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டும். அமைச்சர்களின் அமைச்சரவையும் நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டும். தேசிய கவுன்ஸிலும் நாடாளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும். பதினைந்து குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்கள் நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

அமைச்சரவை மூலம் அரசாங்கத்தை கட்டுப்படுத்தவும், ஜனாதிபதியின் பணிகளை ஆராயவும், தேசிய சபையின் மூலம் அரசியல் விவகாரங்களை மேற்பார்வையிடவும், மற்ற பதினைந்து குழுக்களின் நிதி விவகாரங்கள் மற்றும் பிற விடயங்களை மேற்பார்வையிடவும் ஓர் அமைப்பு உள்ளது. வேறு பல அமைப்புகளும் இதேபோன்ற திட்டங்களை முன்வைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

# சகல வழிகளிலும் இலங்கைக்கு உதவுவது புதுடெல்லியின் கடமை!

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவிப்பு

நெருக்கடியான நேரத்தில் இலங்கைக்கு பக்கபலமாக நின்று அனைத்து வழிகளிலும், அதற்கு உதவுவது புதுடெல்லியின் கடமை என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கு அத்தியாவசிய உதவி மற்றும் மருந்துப் பொருள்களை ஏற்றி வந்துள்ள இந்தியக் கடற்படையின் ஐ.என்.எஸ். காரியல் கப்பலின் மாலுமிகளுடன் நடத்திய மெய்நிகர் கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை, இந்தியாவின் அண்டை நாடாக மாத்திரமன்றி, இந்தியாவின் பழைய நண்பனாகவும் உள்ளது. இந்தியா எப்பொழுதும் அண்டை நாடுகளுக்கு முதலிடம் என்ற கொள்கையைப் பின்பற்றுகிறது.

அத்துடன், இலங்கை, இந்தியாவின் மூலோபாய பங்காளியாகவும் நெருங்கிய கடல்சார் பங்காளியாகவும் உள்ளது. ஆகவே, நெருக்கடியான நேரத்தில் இலங்கையுடன் நின்று, அதற்கு சாத்தியமான எல்லா வழிகளிலும் உதவுவது இந்தியாவின் கடமையாகும்.



ஐ.என்.எஸ். காரியல் கப்பல் மற்றும் பிற இந்திய கடற்படைக் கப்பல்கள் நெருக்கடியான நேரத்தில் இலங்கைக்கு அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்கின்றன எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடல் நிலை பாதுகாப்பாக இருப்பதாக நான் நம்புகிறேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வரலாற்றில் கைப்பற்றப்பட்ட அதிகூடிய கஜமுத்துக்கள்!



இலங்கையில் யானைகளின் அதிகூடிய கஜமுத்துகள் கைப்பற்றப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது.

இதன்படி, 76 யானை முத்துக்களை வைத்திருந்த ஒருவரை, இக்கினியாகல பிரதேசத்தில் வைத்து கடந்த சனிக்கிழமை சிறப்பு அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை முகாமில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த புலனாய்வு தகவலின் அடிப்படையில் அவர் கைதுசெய்யப்பட்டார்

இலங்கையின் வரலாற்றில் கைப்பற்றப்பட்ட அதிக எண்ணிக்கையான யானை கஜமுத்துகள் இவையாகும். கைதுசெய்யப்பட்ட அம்பாறையைச் சேர்ந்த 67 வயதுடையவர், மேலதிக விசாரணைகளுக்காக இகினியாகல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# மின் துண்டிப்பைக் கைவிட 10 கோடி டொலர் தேவை!

## அமைச்சர் வெளியிட்ட தகவல்

இலங்கையில் தற்போதைக்கு நடைமுறைப்படுத்தப்படும் மின்வெட்டை முற்றாகக் கைவிடுவதாயின் மாதந்தோறும் 10 கோடி அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றன என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர –

நீர் மின்சாரம் அல்லது அனல் மின்சாரம் எந்த வகையிலாவது இருபத்தி நான்கு மணிநேரமும் மின்சாரத்தை வழங்குவது தற்போதைக்கு முடியாத காரியம். அவ்வாறு வழங்குவதாயின் 31 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல், 63 ஆயிரம் மெற்றிக் தொன் எஞ்சின் ஒயில் மற்றும் 11 ஆயிரம் மெற்றிக் தொன் நெப்னா என்பன தேவைப்படும். அவற்றைப் பெறுவதாயின் மாதந்தோறும் 10 கோடி அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என்றும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

# ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்களுக்கு இனி 95 ஒக்டேன் பெற்றோல் இல்லையாம்!

ஓட்டோக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு 95 ஒக்டேன் வழங்குவதை இடைநிறுத்த பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையொன்றை சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அனுப்பியுள்ளது.

ஒருசில ஓட்டோ சாரதிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் தங்கள் வண்டிகளுக்கு நிரப்பும் சாக்கில் 95 ஒக்டேன் பெற்றோலைப் பெற்று அதனை அதிக விலைக்கு வேறு நபர்களுக்கு விற்பனை செய்கின்றனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனையடுத்தே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்த முடிவை மேற்கொண்டுள்ளது. தற்போதைய நிலையில் 6 ஆயிரத்து 142 மெற்றிக் தொன் அளவிலேயே 95 ஒக்டேன் பெற்றோல் கையிருப்பில் உள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

# ரஞ்சன் ராமநாயக்கவைப் பார்வையிட சிறைச்சாலை செல்லும் நீதியமைச்சர்!

நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ அங்குணகொல பெலஸ்ஸ சிறைச்சாலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளேன் என அறிவித்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவை நேரில் சந்தித்து அவரது தேவைகள் தொடர்பாகக் கேட்டறிந்து கொள்வது இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

இலங்கையின் முன்னணி கலைஞர்கள் பலரும் கூட்டாக இணைந்து ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு நீதியமைச்சர் விஜேதாஸவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அந்தக் கோரிக்கைக்கு அமைவாக ரஞ்சன் விடுதலை தொடர்பில் கூடிய சீக்கிரம் தேவையான நடவடிக்கைகளை



மேற்கொள்ளவுள்ளேன் எனவும் நீதியமைச்சர் அறிவித்துள்ளார்.

# கதிர்காம உற்சவம் ஜீலை 28 கொடியேற்றத்துடன் ஆரம்பம்!

## மட்டக்களப்பிலிருந்தும் அடியார்கள் பாதயாத்திரையில்!!



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர்காம கந்தன் ஆலயத்தை நோக்கி பாத யாத்திரை எதிர்வரும் ஜுன் 4 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

கதிர்காம கந்தன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு தொண்டைமானாறு செல்வச்சந்தியிலிருந்து கதிர்காமம் நோக்கிய பாத யாத்திரை வருடாவருடம் இடம்பெற்று வந்த நிலையில் கொரோனா சூழ்நிலை காரணமாகக் கடந்த இரண்டு வருடங்களாக பாதயாத்திரை இடம்பெறாத நிலையில் இம்முறை கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வருடம் மட்டக்களப்பிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரையில் பயணிக்கவுள்ளதுடன், அவர்கள் குழுவாகவும் தனியாகவும் பாதயாத்திரையில் ஈடுபடுகின்றமை வழக்கமாக இருந்து வருகின்றது.

பிரதான பாதயாத்திர குழுவினர் எதிர்வரும் 04.06.2022 காலை 8 மணிக்கு தொண்டமானாறு செல்வச்சந்நிதியிலிருந்து தமது பாதயாத்திரையை ஆரம்பிக்கவுள்ளனர்.

இதேவேளை, கதிர்காம கந்தனின் ஆடி மகா உற்சவம் ஆடி மாதம் 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஆவணி மாதம் 11 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் இனிதே நிறைவடையவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆர்ப்பாட்டத்தின் போது சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 4 பேர் விடுதலை!

கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 4 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணிகளின் தலையீட்டின் பின்னர் சந்தேகநபர்கள் விடுவிக்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சனிக்கிழமை இரவு உலக வர்த்தக மையத்துக்கு அருகில் உள்ள வங்கி அவென்யூவுக்குள் நுழைய முயன்றனர். கூட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரணில் விக்கிரமசிங்கவின் அங்கீகாரத்தை தந்திரமாக பயன்படுத்தும் ராஜபக்ஷக்கள்

## பேராசிரியர் சரத் விஜேசூரிய தகவல்

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பிரதமர் பதவியை ஏற்க நடவடிக்கை எடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சரத் விஜேசூரிய இதனைத் தெரிவித்துள்ளார். இணைய ஊடகம் ஒன்றிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டுக்கு தொல்லையெனவும், தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சாபம் எனவும் அவர் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க பெரும் இராஜதந்திர அங்கீகாரம் பெற்ற அரசியல் தலைவர் எனவும், இந்த அங்கீகாரத்தை ராஜபக்ஷக்கள் தந்திரமாகப் பயன்படுத்தி வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசமைப்புக்கு முரணான ஆட்சி தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவியை வழங்குவதற்காக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட ஒப்பந்தத்தில் பஸில் ராஜபக்ஷவின் தொடர்பையும் பேராசிரியர் சரத் விஜேசூரிய வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும், நாமல் ராஜபக்ஷவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பிரதமர் பதவியை ஏற்க நடவடிக்கை எடுத்ததாக இந்தக் கலந்துரையாடலில் பேராசிரியர் சரத் விஜேசூரிய வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.05.2022இல் வெளியிடப்பெற்றது.